இனி இது ரகசியம் அல்ல!

வடக்கு, கிழக்கில் இராணுவக் கெடுபிடியைக் குறைப்பது தொடர்பாக நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற உயர்மட்டப் பாதுகாப்புக் கூட்டத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முழு ஈடுபாட்டுடன் பங்குபற்றவில்லை, விட்டேத்தியாக நடந்துகொண்டார் பக்கம் 02


# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 ஆவணி 14 வெள்ளிக்கிழமை 30.08.2019 கதிர் 298


## தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்பே ஐ.தே.கவின் வேட்பாளர் தெரிவு!

### கட்சி யாப்பின்படி அதுதான் நிலைமையாம்

கொழும்பு, ஓக. 30

ஐக்கிய தேசியக் கட்சியின் யாப்பின்படி, ஜனாதிபதித் தேர்தல் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் வரை ஜனாதிபதி வேட்பாளரைப் பெயரிட முடியாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.தே.க. யாப்பின் கீழ், ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுக்களைச் சமர்ப்பிக்கத் தேர்தல் ஆணையர் அறிவிப்பு வெளியிட்ட பின்னரே ஜனாதிபதி வேட்பாளரைப் பெயரிட முடியும் என்றும், இதற்கு முன்னர் வேட்பாளர் குறித்து முடிவெடுக்கும் அதிகாரம் யாருக்கும் கிடையாது என்றும் ஐ.தே.கவின் சட்டச் பக்கம் 11

## இலட்சோப லட்சம் பக்தர் வெள்ளத்தில் நல்லூரான் தேரில் நேற்று அருள் வலம்

யாழ்ப்பாணம், ஓக. 30

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த தேர்த்திருவிழா நேற்று வியாழக்கிழமை காலை நடைபெற்றது. நல்லூர்க் கந்தன் தேரில் ஏறி அங்கு கூடியிருந்த பக்தர்களுக்கு அருள் மழை பொழிந்தார்.

நேற்றுக் காலை 6 மணியளவில் ஆரம்பமான சிறப்பு வழிபாடுகளை பக்கம் 11



## எஸ்.பி.திஸாநாயக்க, டிலான் பெரமுன பக்கம் பாய்ந்தனர்!

கொழும்பு, ஓக. 30

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.பி.திஸாநாயக்க மற்றும் டிலான்பெரேரா ஆகியோர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியில் அங்கத்துவம் பெற்றுள்ளனர்.

இருவரும் நேற்று முற்பகல் பக்கம் 11

# ஒற்றையாட்சிதான்! ஒரே பிடியில் சஜித்

## அவர் கொள்கை விளக்கம்

கொழும்பு, ஓகஸ்ட், 30

நாட்டில் ஒற்றையாட்சி முறைதான். அதில் விட்டுக் கொடுப்புக்கு இடமில்லை – இவ்வாறு அடித்துக் கூறுகின்றார் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்க முனைப்புடன் போட்டியிடுபவருமான சஜித் பிரேமதாஸா. பக்கம் 11

## கோட்டாபயவைச் சந்தித்த மைத்திரியின் பிரதிநிதிகள்!

கொழும்பு, ஓக. 30

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மஹிந்த அமரவீர, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர, பொருளாளர் லசந்த அலகியவண்ண ஆகியோர் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன பக்கம் 11

## பளையில் புதனிரவு இரண்டு பேர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 30

பயங்கரவாத தடுப்புப் பிரிவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள பளை மருத்துவர் சிவரூபன் வழங்கிய தகவலின் பிரகாரம் நேற்று முன் தினம் இரவு பளைப் பகுதியில் இருவர் பக்கம் 11

## கன்னியா வெந்நீரூற்று விவகாரத்தில் வழங்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவை விலக்க மன்று மறுப்பு

### பிக்குகள் மற்றும் அரசுத் தரப்பின் கோரிக்கைகள் நிராகரிப்பு

திருகோணமலை,ஓக.30

திருகோணமலை கன்னியா வெந்நீர் ஊற்றுப் பகுதியில் அமைந்திருக்கும் பிள்ளையார் ஆலயத்தையும் அதனை அண்டிய பகுதிகளையும் பக்கம் 11



## குற்றச் செயல்களில் ஈடுபடுவோரை கண்டுபிடிக்க புதிய தொழில்நுட்பம்

### பொலிஸ் திணைக்களம் நடவடிக்கை

கொழும்பு, ஓக. 30

குற்றச்செயல்களுடன் தொடர்புள்ள சந்தேக நபர்களை கண்டுபிடிப்பதற்காக முகங்களை அடையாளம் காணும் தொழிநுட்பத்தை உபயோகிப்பதற்கான பணிகள் தற்போது இடம்பெற்று பக்கம் 11

## வவுனியாவில் நேற்று வெடிபொருள்கள் மீட்பு!



வவுனியா, ஓக. 30

வவுனியா கோவில்புதுக்குளம் பகுதியில் குளக்கரைக்கு அண்மித்த பகுதியில் வெடிபொருள்களை வவுனியா பொலிஸார் பக்கம் 11

## நல்லூர்த் தேர்த் திருவிழாவில் 20 பேரிடம் தங்கநகை திருட்டு

யாழ்ப்பாணம், ஓக. 30

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்த சுவாமி ஆலயத் தேர்த் திருவிழாவில் பங்கேற்ற அடியவர்கள் 20 பேரிடம் தங்க நகைகள் திருடப்பட்டுள்ளதாக முறைப்பாடுகள் கிடைத் பக்கம் 02

## மருத்துவர் சிவரூபன் வழங்கிய தகவல் மூலம் ஆறு பேர் கைது!

### கொழும்பிலிருந்து ரி.ஐ.டி. அதிகாரிகள் யாழ். வருகை

கொழும்பு, ஓக. 30

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள மருத்துவர் சிவரூபன் வழங்கிய தகவலின் பக்கம் 02

## மருத்துவர் சிவரூபன் கைதானமைக்கு கோட்டாபய கொலைச் சதி காரணமல்ல!

### பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 30

முன்னாள் பாதுகாப்புச் செயலாளரும் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளருமான கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரைக் கொல்லச் சதித் திட்டம் தீட்டப்பட்டமையை அடுத்தே மருத் பக்கம் 11



## ஆஸியில் கதறக் கதற விமானத்தில் ஏற்றப்பட்ட தமிழ்க் குடும்பம் நீதிமன்ற உத்தரவால் நடுவானில் டார்வின் திரும்புகிறது விமானம்

மெல்போர்ன்,ஓக.30

ஆஸ்திரேலியாவில் தஞ்சம் புகுந்த இலங்கைத் தமிழ் குடும்பத்தை அங்கிருந்து நாடு கடத்தும் ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் முயற்சிகளை நீதிமன்றம் இறுதி நிமிடத்தில் தடுத்து நிறுத்தியுள்ளது.

விமானத்தில் கதறகதற குடும்பத்துடன் ஏற்றப்பட்ட தமிழ் தம்பதியினருடன் விமானம் புறப்பட்டது. ஆனால், நீதிமன்றத்தின் தலையீட்டினால் இறுதிநேரத்தில் நாடுகடத்தல் தடுக்கப்பட்ட நடுவானில் ஆஸி திரும்புகின்றது பக்கம் 02

# ஐ.தே.க. இழுபறி நீடிப்பு

கொழும்பு, ஓக. 30

ஜனாதிபதி வேட்பாளராக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் அமைச்சருமான சஜித் பிரேமதாஸவை நியமிப்பதில் உள்ள இழுபறி நிலைமை தொடர்கிறது.

சஜித் ஆதரவாளர்களாக இருந்து கட்சித் தலைவரை பொதுவெளியில் விமர்சித்த இரண்டு எம்.பிக்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிலையில் நேற்று முன் தினம் அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோவை பிரதமர் ரணில் இது விடயத்தில் எச்சரித்திருக்கிறார் எனக் கூறப்படுகின்றது.

சஜித்துக்கு ஆதரவாகச் செயற்படும் அமைச்சர்களின் அமைச்சுப் பதவிகள் கேள்விக்குறியாகும் நிலைமை ஏற்பட்டுள்ளதால் சஜித் ஆதரவு அணியில் இருந்த பலர் இப்போது அடக்கி வாசித்து வருகின்றனர் எனக் கூறப்படுகின்றது.

எனினும் நேற்று முன் தினம் இரவு அமைச்சர் மங்களவின் இல்லத்தில் நடந்த இராப்போசன விருந்துபசாரத்தில் கலந்து கொண்ட சஜித் ஆதரவு எம்.பிக்கள் பலர் சஜித்தை ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்க கோரும் கடிதத்தில் ஒப்பமிட்டு அதனை கட்சித் தலைவரிடம் கொடுப்பதெனத் தீர்மானித்தனர்.

இதற்கிடையில் குருநாகல் நகரில் எதிர்வரும் 6 ஆம் திகதி சஜித் ஆதரவு கூட்டமொன்றை நடத்த இராஜாங்க அமைச்சர் அசோக்க அபேசிங்க நடவடிக்கை எடுத்து வருகிறார். அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள சஜித் ஆதரவாளர்கள் பலர் தீர்மானித்துள்ள நிலையில் அது தொடர்பில் கட்சித் தலைமை கவனமாக ஆராய்ந்து வருவதாக அறியமுடிந்தது. (ஐ)

# இந்திய, கனேடிய, ஆஸ்திரேலியா தூதுவர்களுக்கு ஐ.தே.க. விருந்து!

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையிலான ஜனநாயக தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளரை அறிவிப்பதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், நேற்று முன் தினம் இரவு நடந்த ஐக்கிய தேசிய கட்சியின் இராப்போசன விருந்தில் சர்வதேச இராஜதந்திரிகள் மற்றும் ஐக்கிய தேசிய கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்திய தூதுவர் தரன்ஜித் சிங் சந்து உள்ளிட்ட இராஜதந்திரிகள் பலரும் இதில் கலந்து கொண்டிருந்தனர். கனடா மற்றும் ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளின் தூதுவர்களும் இந்த இராப் போசனத்தில் கலந்து கொண்டிருந்தனர். ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே – ரஜமல்வத்த வீதியில் அமைத்துள்ள அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் இல்லத்தில் இந்த விருந்துபசாரம் இடம்பெற்றுள்ளது.

# ரயில் – லொறி மோதி விபத்து தெஹிவளை அருகே சம்பவம்



கொழும்பு, மருதானையிலிருந்து கரையோர ரயில் பாதை ஊடாக மாத்தறை நோக்கி பயணித்த ரயிலுடன் லொறியொன்று மோதியதில் ஏற்பட்ட விபத்தில் 7 பேர் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தெஹிவளை மற்றும் வெள்ளவத்தை பகுதிகளுக்கிடையில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

லொறியைப் பின்நோக்கி செலுத்தும்போது ரயில் பாதையில் புகுந்ததனால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. லொறி சாரதியின் கவனக் குறைவு இவ்விபத்துக்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது.

ரயிலின் மிதி பலகையில் பயணித்தவர்களும் லொறியில் இருந்தவர்களுமே இவ்விபத்தில் காயமடைந்துள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

## நல்லூர்த்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

முறைப்பாடுகளின் அடிப்படையில் சுமார் 45 பவுண் தங்க நகைகள் நேற்றுத் திருடப்பட்டுள்ளன. அவற்றில் தாலிக்கொடி மூன்றும் 17 சங்கிலிகளும் அடங்குகின்றன. ஆண்கள் மூவரும் தமது தங்கச் சங்கிலியைப் பறிகொடுத்தார் என முறையிட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆலயத்துக்கு வருகை தந்த பக்தர்களிடம் வெளிவீதியில் வைத்து இந்தத் திருட்டுக்கள் இடம்பெற்றுள்ளன.

அத்துடன், தங்க நகைகளைப் பறிகொடுத்த சிலர் பொலிஸ் பிரிவில் முறைப்பாடு செய்யாது சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நல்லூர் ஆலய வெளி வீதியில் 60 சி.சி.ரி.வி. கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளமையுடன் 600 பொலிஸாருக்கு மேல் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். எனினும் திருடர்கள் தமது கைவரிசையைக் காண்பித்துள்ளனர்.

இதேவேளை, அலைபேசி உள்ளிட்ட உடைமைகளும் திருடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-07)

## மருத்துவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படையில், இதுவரை ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

சின்னமணி டனீஸ்வரன், இரத்தினம் கிருஷ்ணராஜா, மோகனசுந்தரம் சின்னத்துரை, விநாயகமூர்த்தி நிஜிலன் ஆகிய நால்வரும் ஏற்கனவே கைது செய்யப்பட்டிருந்த நிலையில் நேற்று ரி. நிர்மலராஜ், ரூபன் ஜேசுதாசன் ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் யாழ்ப்பாணத்தில் தடுத்து வைக்கப்பட்டு, பயங்கரவாத விசாரணைப் பிரிவினால் விசாரிக்கப்பட்டு வருகின்றனர். இவர்களிடம் விசாரணை நடத்த கொழும்பில் இருந்து அதிகாரிகள் குழுவொன்று யாழ்ப்பாணம் வந்துள்ளது என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார். (ஐ)

## ஆஸியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த விமானம்.

நடேஸ் – பிரியா தம்பதியினரும் அவர்களது இரு குழந்தைகளும் விசேட விமானத்தில் ஏற்றப்பட்டு விமானம் புறப்பட்ட பின்னர் நீதிமன்றம் அவர்களை வெளியேற்றும் நடவடிக்கையைத் தடுக்கும் உத்தரவைப் பிறப்பித்தது என ஆஸ்திரேலிய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

நடேஸ் – பிரியா தம்பதியினரை குழந்தைகளுடன் ஆஸ்திரேலிய எல்லைப் பாதுகாப்பு பிரிவினர் நேற்று இரவு மெல்பேர்ன் தடுப்பு முகாமிலிருந்து விமானநிலையத்திற்கு இலங்கைக்கு நாடு கடத்துவதற்காக அழைத்து சென்றுள்ளனர்.

இந்தத் தகவல் கேள்விப்பட்ட தமிழ் தம்பதிகளிற்கு ஆதரவான மக்களும் மனித உரிமை ஆர்வலர்களும் விமானநிலையத்திற்கு விரைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, நடேஸ் – பிரியா தம்பதியினரின் சட்டத்தரணி கரீனா போர்ட்டின் மேற்கொண்ட அவசர முயற்சிகளை தொடர்ந்து நீதிமன்றம் தமிழ் குடும்பத்தை வெளியேற்றுவதற்கு இடைக்கால தடை விதித்துள்ளது. நீதிபதியொருவர் தொலைபேசி மூலம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இதேவேளை நீதிமன்ற உத்தரவு கிடைப்பதற்கு முன்னரே விமானம் புறப்பட்டுவிட்டதாகவும் நீதிமன்ற உத்தரவை தொடர்ந்து விமானம் நடுவானில் டார்வினிற்கு திரும்பியுள்ளதாகவும் ஆஸ்திரேலிய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

தமிழ் தம்பதியினரை வரவேற்க பலர் விமான நிலையத்தில் காத்திருக்கின்றனர் எனவும் ஆஸ்திரேலிய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை பிரியாவை அதிகாரிகள் பலவந்தமாக விமானத்திற்குள் இழுத்து சென்றனர் என விமானநிலையத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சைமனே கமரோன் என்பவர் தெரிவித்துள்ளார்.

அதிகாரிகள் எது குறித்தும் அக்கறையின்றி பிரியாவை இழுத்துச்சென்றனர், அவர் கதறினார். இரு குழந்தைகளும் கதறினார்கள். அங்கு மிகவும் மனதை நெருடும் சம்பவங்கள் இடம்பெற்றன – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றெல்லாம் செய்திகள் வெளியாகின அல்லவா?

அந்தக் கூட்டத்தில் சம்பந்தன், சுமந்திரன், செல்வம், சித்தார்த்தன் போன்ற கட்சித் தலைவர்கள் பங்குபற்றாமையால்தான் அவர் அப்படி நடந்துகொண்டார் என்று கூறப்பட்டது. ஆனால், அது தவறானது. அவர் அப்படி நடந்துகொண்டிருந்தமைக்கு வேறு காரணங்கள் உள்ளன என்பது இப்போதான் தெரியவந்துள்ளது.

கூட்டத்தின் இடையே ஜனாதிபதி எழுந்து வெளியே சென்று நீண்ட நேரம் கழித்து, கூட்டம் முடியும் கடைசி வேளையில் வந்தார் என்று கூறப்பட்டதல்லவா?

அந்தச் சமயத்தில் அங்கு – பக்கத்து அறையில் – ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பங்குபற்றவேண்டிய இன்னொரு முக்கிய அரசியல் சந்திப்பும் ஒரே சமயத்தில் நடந்துகொண்டிருந்தது. அதற்கும் தலைகாட்டவேண்டியவராக இருந்தார் ஜனாதிபதி.

அவரைப் பொறுத்தவரை அந்தச் சந்திப்பு இந்தக் கூட்டத்தை விட மிக முக்கியமானது. அவரது அரசியல் எதிர்காலத்தில் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய சந்திப்பு அது. அந்த சந்திப்பில் கலந்துகொண்டவர்களுள் ஒருவர் பஸில் ராஜபக்ஷ என்பதை உறுதிப்படுத்த முடிந்தது.

அப்படியானால், அந்தச் சந்திப்பு எத்தகையது, அது மைத்திரிபால சிறிசேனவுக்கு எவ்வளவு முக்கியமானது என்பதை நீங்களே ஊகித்துக்கொள்ளலாம்.

அந்தச் சந்திப்பில் ஆராயப்பட்ட அரசியல் விடயங்களின் போக்குத் தமக்குச் சாதகமாக இருக்கவில்லை என்ற குழப்பத்தில் இருந்தாராம் மைத்திரிபால சிறிசேன. அதனால்தான் அதே சமயத்தில் கூட்டமைப்பினருடன் நடந்த கூட்டத்தில் அவர் அதிக சிரத்தை எடுக்காதவராக நடந்துகொண்டார். அந்தக் கூட்டத்தின் பொறுப்பை வடக்கு ஆளுநரின் தலையில் கட்டிவிட்டு தாம் மற்றைய சந்திப்பில் அதிக சிரத்தையைக் காட்டியமைக்கும் அதுதான் காரணமாம்.

அதுதான் உண்மை எனின் அவர் அப்படி அந்தக் கூட்டத்தில் விட்டேத்தியாக நடந்துகொண்டமையை நாம் பொருட்படுத்தாமல் விடலாம்.

அந்தக் கூட்டத்துக்கு சுமந்திரனும் போகவில்லை. அதனால் தமிழர் தரப்பின் கருத்து ஓங்கி, ஆணித்தரமாக, உறைப்பாக, உரைக்கப்படவில்லை என்ற ஒரு குறை ஏற்பட்டுள்ளது. அதுவும் புதிய இராணுவத் தளபதியாக லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா முதல் முறையாக இராணுவத் தளபதியாக பங்குபற்றிய – இராணுவக் கெடுபிடிகளைக் குறைப்பது தொடர்பான – கூட்டத்தில் சுமந்திரன் இல்லாதமை ஒரு பெரும் குறையாகவே உணரப்பட்டது. சரியான சொல்லாடலில், சரியான வாதத்தைப் பதிலடியாக வைத்து, அதன் மூலம் இராணுவத் தளபதியின் வாய்ச் சவடால் ஓங்கி ஒலிக்காமல் அடக்கியிருக்கக் கூடிய வாய்ப்புத் தவறிவிட்டது என்ற கவலை பலருக்கும்.

இத்தகைய விடயங்களை வாய்வீச்சில் கையாள்வதற்கு சுமந்திரனுக்கு அப்பால் பொருத்தமான மேலும் ஒருவரையாவது தேர்ந்தெடுத்து அனுப்புவதில் நமது வாக்காளர்கள் தவறிழைத்துவிட்டார்களோ என்று எண்ணத் தோன்றுகின்றது. இல்லையேல் அத்தகைய தகைமையாளர்களை வேட்பாளர்களாக நிறுத்தாமல் வெட்டி ஒதுக்கியதன் மூலம் கூட்டமைப்புத் தலைமை தனது சுயநலத்தைப் பேணிக் கொண்டதோ தெரியவில்லை.

இனிவரும் காலங்களில் மக்களும் தலைவர்களும் சேர்ந்து இந்த நிலைமையை மாற்றியமைக்கவேண்டும். கம்பரெலிய நிதிக்கும் பிற உதவிகளுக்கும் அமைச்சுகள் தோறும் அலைந்து 'கெஞ்சும்' எம்.பிக்களுக்கு மேலதிகமாக நாடாளுமன்றிலும் வெளியிலும் மிஞ்சி – விஞ்சி – நிற்கும் கருத்தாடல்களைச் சுமந்திரனுக்கு நிகராக வைக்கக்கூடிய ஓரிருவரையாவது நாம் தேர்தெடுத்து நாடாளுமன்றுக்கு அனுப்பவேண்டும். நாடாளுமன்றக் கதிரைகளை நீண்ட காலம் சூடேற்றி ஆண்டனுபவிக்கும் சில 'பழசுகள்' விலகிக் கொடுத்தால்தான் அதற்கு வாய்ப்புக் கிட்டும். செய்வார்களா நம்மவர்கள்?

நேற்றுமுன்தினம் மேற்படி கூட்டத்தில் சுமந்திரன் பங்குபற்றாமல் விட்டமைக்கும் காரணம் உண்டு.

ரஞ்சன் ராமநாயக்க எம்.பிக்கு எதிரான நீதிமன்ற அவமதிப்பு வழங்கின் மீதான விசாரணைகள் நேற்றுமுன்தினம், நேற்று, இன்று ஆகிய மூன்று தினங்களும் நடைபெறும் என உயர்நீதிமன்றம் ஏற்கனவே திகதி நிர்ணயித்திருந்தது. ரஞ்சன் ராமநாயக்காவின் சட்டத்தரணி சுமந்திரன்தான். ராமநாயக்காவின் சாட்சியங்களை நேற்றுமுன்தினம் அவர் நெறிப்படுத்தவேண்டியிருந்தது.

நேற்றுமுன்தினம் காலை 10.30 மணி முதல் மாலை 4 மணி வரை அந்தச் சாட்சியத்தை நெறிப்படுத்தும் பணியை சுமந்திரன் உயர் நீதிமன்றத்தில் மூன்று நீதியரசர்கள் ஆயத்தின் முன்னால் முன்னெடுத்தார்.

நீதிமன்றத்தின் முன்னைய முடிவின் படி அந்த விசாரணை நேற்றும் இன்றும் தொடரவேண்டும்.

ஆனால் நேற்று கன்னியா வெந்நீருற்று வழக்கு விடயத்தில் தாம் திருகோணமலை மேல்நீதிமன்றத்தில் முன்னிலையாகா விட்டால் அந்த வழக்கில் பெரும் பின்னடைவு ஏற்படும் என்பது சுமந்திரனுக்குத் தெரியும்.

ஆகையால், கொழும்பில் உயர்நீதிமன்றத்தின் நேற்றைய விசாரணைகளை நடத்தாமல் தள்ளிப் போடுவதற்கு ஒரு வழியைக் கண்டுபிடித்தார் சுமந்திரன்.

*"நீதியரசர்களே! இந்த வழக்கில் எனது கட்சிக்காரரான ரஞ்சன் ராமநாயக்கா இந்தத் தடவை ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுகின்றார். இன்று பகல் முழுவதும் இந்த நீதிமன்றத்தில் பிரசன்னமாகி இருந்து அவர் சாட்சியமளித்துள்ளார். அடுத்த பாடப் பரீட்சை நாளைமறுதினம் (வெள்ளியன்று) அவருக்கு உள்ளது. அதற்கு அவர் தம்மைத் தயார்செய்யவேண்டும். அதனால் இந்த வழக்கை வியாழன், வெள்ளிக்கிழமைகளில் நடத்தாமல் ஒத்திவையுங்கள்"* – என்று விநயமாக வேண்டினார் சுமந்திரன்.

நீதியரசர்கள் பார்த்தனர். ஐம்பத்தாறு வயதில் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை சித்தியடைய வேண்டும் என்று முயலும் ஓர் எம்.பிக்குப் படிப்பதற்கு வாய்பளிப்பதற்காக முதல்நாள் விசாரணையோடு வழக்கை ஒத்திவைத்தனர்.

இதுதான் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி செயலகத்தில நடைபெற்ற கூட்டத்தில் சுமந்திரன் பங்குபற்றமுடியாமல் போனமைக்கும், திருகோணமலை மேல்நீதிமன்றத்தில் நேற்று நடைபெற்ற கன்னியா வெந்நீருற்று வழக்கில் சுமந்திரன் பற்புற்ற முடிந்தமைக்கும் பின் னால் உள்ள சூத்திரம்.

**- மின்னல் -**

# கோட்டாபயவை கொல்லத் திட்டமா?

## பாதாள உலகக் குழுவுடன் பேரமாம்



கொழும்பு, ஓக. 30

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவைப் படுகொலை செய்வதற்கு பாதாள உலக குழுவினருடன் பேரம் பேசப்பட்டுள்ளதாகவும், இதனால் அவரது பாதுகாப்பை அதிகரிக்குமாறு பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் கோரியுள்ளனர் என்று கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தீவிரவாதச் செயற்பாடுகளுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட பளை மருத்துவமனையின் பொறுப்பதிகாரியான மருத்துவர் சின்னையா சிவரூபனிடம் விசாரணை நடத்தி வரும் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரே கோட்டாபயவின் பாதுகாப்பை அதிகரிக்குமாறு கோரியுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் கோட்டாபய ராஜபக்ஷவை படுகொலை செய்வதற்காக துப்பாக்கிதாரிகளின் குழுவொன்றை புலம்பெயர் தமிழர்கள் நிறுத்தியுள்ளனர் என்று மருத்துவர் சிவரூபன் தகவல் வெளியிட்டுள்ளார் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

புலிகள் இயக்க முன்னாள் போராளிகளின் உதவியுடன் கோட்டாபய ராஜபக்ஷவைப் படுகொலை செய்வது கடினம் என்பதைப் புரிந்து கொண்ட புலம்பெயர் தமிழர்கள், இதற்கான பொறுப்பைப் பாதாள உலகக் குழுவினரிடம் ஒப்படைத்துள்ளனர் என்றும் மருத்துவர் சிவரூபன், பயங்கரவாத விசாரணைப் பிரிவினரிடம் கூறியுள்ளார்.

இதற்காகப் பெருமளவு பணத்தைப் புலம்பெயர் தமிழர்கள் பாதாள உலக புள்ளிகளுக்கு வழங்கியுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷ தவிர, டக்ளஸ் தேவானந்தா, கருணா உள்ளிட்ட பலரும் புலம்பெயர் தமிழர்களின் தாக்குதல் பட்டியலில் இருக்கின்றனர் எனவும், மருத்துவர் சிவ ரூபன் தெரிவித்துள்ளார் எனவும், பயங்கரவாத விசா ரணைப் பிரிவினர் கூறினர் எனக் கொழும்பு ஆங்கில நாளிதழ் தகவல் வெளியிட்டுள்ளது.

## பிணைமுறி மோசடியை விசாரணையை விரைந்து முடிக்க ஜனாதிபதி உத்தரவு!

கொழும்பு, ஓக. 30

பிணைமுறி குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகளை துரிதப்படுத்துமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உரிய துறையினருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

மேலும் அந்த விசாரணை நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தி குற்றவாளிகளுக்கு எதிராக விரைவில் நடவடிக்கை எடுக்குமாறும் பணிப்புரை விடுத்துள்ள ஜனாதிபதி, இந்த விசாரணைகள் தாமதமடைதல் நீதி நிலைநாட்டப்படுவதற்குத் தடையாகும் எனக் குறிப்பிட்டார்.

பிணைமுறி குற்றச்சாட்டு தொடர்பான விசாரணை ஆணைக்குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பிலான நான்கு இடைக்கால அறிக்கைகள் இதுவரை கிடைக்கப் பெற்றுள்ளதுடன், எதிர்வரும் டிசெம்பர் மாதமளவில் ஏனைய அறிக்கைகளையும் முன்வைக்க முடியும் என இதன்போது தெரிவிக்கப்பட்டது.

பணச்சலவை தொடர்பான 05 வருட ஆவணங்களை வங்கிகளிடம் கோரியுள்ளபோதிலும் அந்த அறிக்கைகள் இதுவரை கிடைக்கப் பெறாமையினால் விசாரணைகளை முன்னெடுப்பதில் அசௌகரியம் ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

இந்த மோசடியுடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு எதிராக தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டது.

மேலும் இவ்விடயம் தொடர்பான சாட்சியங்கள் சத்தியப் பிரகடனங்களினூடாக எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்கு முன்னர் முன்வைக்கப்படுமெனவும் குறிப்பிடப்பட்டது.

விசாரணை நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்காகத் தமது தரப்பில் வழங்கவேண்டிய அனைத்து ஒத்துழைப்புகளும் பெற்றுத்தரப்படும் என ஜனாதிபதி இதன்போது குறிப்பிட்டார்.

நிதியமைச்சின் செயலாளர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி, சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதிகாரிகள் மற்றும் பதில் பொலிஸ்மா அதிபர் சீ.டி.விக்கிரமரத்ன உள்ளிட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். (ஐ)

## தற்கொலைக் கூண்டுதாரியின் எச்சங்களை இந்து மயானத்திலிருந்து அகற்றவேண்டும்

### மட்டக்களப்பு மாநகரபை அதிரடித் தீர்மானம்

மட்டக்களப்பு, ஓக. 30

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட கல்லியங்காட்டில் புதைக்கப்பட்டுள்ள தற்கொலைக் குண்டுதாரியின் எச்சங்களை அங்கிருந்து அகற்றுவதற்கான சட்ட ஏற்பாடுகளை மேற்கொள்வது என மட்டக்களப்பு மாநகர சபையினால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாநகரசபையின் விசேட அமர்வு நேற்றுமுன்தினம் மாலை மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவன் தலைமையில் நடைபெற்றது.

குண்டுதாரியின் எச்சங்கள் மாநகரசபையின் எந்த அனுமதியும் பெறப்படாமல் மாநகரசபையின் அதிகாரத்துக்குட்பட்ட இந்து மயானத்தில் புதைத்தமைக்குக் கண்டனம் தெரிவித்த மாநகர முதல்வர், அந்த மனித எச்சங்களை அங்கிருந்து அகற்றுவதற்கு பொலிஸ் நிலையத்தில் எழுத்துமூல முறைப்பாட்டைச் செய்து அதன் ஊடாக நீதிமன்றக் கட்டளையைப் பெற்று, எச்சங்களை அகற்றுவது தொடர்பான பிரேரணையை நிறைவேற்றுவதற்கு உறுப்பினர்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்ற கோரிக்கை முன்வைத்தார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சூத்திரதாரியின் எச்சங்கள் கல்லியங்காட்டில் புதைக்கப்பட்டமைக்கு மாநகரசபை உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

அத்துடன் மாநகரசபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் மீது பொலிஸார் நடத்திய தாக்குதல்கள் குறித்தும் உறுப்பினர்கள் சிலர் உரையாற்றினர்.

தொடர்ந்து மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதியில் சட்ட விரோதமாக இந்து மயானத்தில் புதைக்கப்பட்ட குண்டுதாரியின் உடல் எச்சங்களைச் சட்ட நடவடிக்கை ஊடாக மீண்டும் தோண்டியெடுத்து வேறு இடங்களில் புதைப்பதற்கான சட்ட ஏற்பாடுகளை மேற்கொள்வது என தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஐ)



# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## விக்கி இரு தோணிகளில் கால்!

இலங்கைத் தமிழர்களின் அரசியல் செல்நெறி ஓர் இக்கட்டான காலகட்டத்தில் நகர்ந்தபோது இங்கு உதித்ததே 'தமிழ் மக்கள் பேரவை'.

அதன் வரலாற்றுப் பிறப்பாக்கம், செயற்போக்கு, தற்போதைய நிலைமை குறித்தெல்லாம் பல்வேறு விமர்சனங்கள் இன்றளவும் நீடிக்கின்றன.

அதன் சுயாதீனத் தன்மை குறித்து இப்போது கேள்விகள் பலவாறாக எழுப்பப்படுகின்றன.

நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் வடக்கு மாகாண முதலமைச்சராக இருந்தபோது அவரைச் சுற்றி மையமாக வைத்தே பேரவை எழுந்தது.

அதில் பல்வேறு பிற திறத்தாரும் ஆரம்பம் முதலே பின்னிப்பிணைந்து இணைந்து செயற்பட்டு வருகின்ற போதிலும், அதன்மைய விசையாக – மைய அச்சாக – செயற்பட்டு வருபவர் நீதியரசர் விக்னேஸ்வரன்தான்.

ஆனாலும் அந்தத் தமிழ் மக்கள் பேரவையை ஓர் அரசியல் கட்சியாக – அல்லது கட்சி சார் அரசியல் சக்தியாக – மாற்றுவதற்கு நீதியரசர் விக்னேஸ்வரன் உடன்பட்டிலர். அதைத் தனித்துவமாக ஓர் மக்கள் இயக்கமாக முற் கொண்டு செல்ல வேண்டுமே ஒழிய அது ஓர் அரசியல் கட்சியின் செயற்கிளையாக மாறக் கூடாது என்பதில் மிக உறுதியாக இருந்து வருபவர் அதன் இணைத் தலைவர்க ளில் ஒருவரான நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன்.

ஆனால், அப்படிக் கூறிக்கொண்டு அதை ஓர் அரசிய கட்சியின் முகமாகக் காட்டத் தக்க விதத்தில் நீதியரசர் விக்னேஸ்வரனே செயற்படுகின்றார் என ஒரு குற்றச்சாட்டு தமிழ் மக்கள் பேரவைக்குள்ளிருந்தே கிளம்பியிருக்கின்றது. நீதியரசர் விக்னேஸ்வரன் விரைந்து அவதானித்து தம்மைத் திருத்த வேண்டிய விடயம் இது என்று கருதுகிறோம்.

தமிழ் மக்கள் பேரவையை ஸ்தாபித்து, அதன் இணைத் தலைமையை ஏற்ற காலத்தில் இருந்து, பேரவை தொடர்பில் அவர் திரும்பத் திரும்ப ஓதும் ஒரே மந்திரம் உண்டு.

அது, 'பேரவை மக்கள் இயக்கம்; அது அரசியல் கட்சியாகச் செயற்படாது' – என்பதுதான்.

தாம் திரும்பத் திரும்ப உச்சாடனம் செய்யும் அந்த மந் திரத்தில் நீதியரசர் விக்னேஸ்வரன் உண்மையாக இருக்கின்றாரா என்பதே இப்போது சர்ச்சையைக் கிளப்பியிருக்கும் வினாவாகும்.

* தமிழ் மக்கள் பேரவை ஓர் அரசியல் கட்சி அல்ல, ஒரு மக்கள் இயக்கம் என்று கூறிக் கொண்டுதான், அந்த மக்கள் இயக்கத்தின் பகிரங்கக் கூட்டத்தைக் கூட்டி, அந் தக் கூட்டத்தில் வைத்து தமது புதிய அரசியல் கட்சி பற்றிய அறிவிப்பையும், அது தொடர்பான விவரங்களையும் பகி ரங்கமாக அறிவித்தார் நீதியரசர் விக்னேஸ்வரன். (நீதியரசரே கூறுகின்றமை போல இது கட்சி சாரா மக்கள் இயக்கமாயின், அதன் கூட்டத்தை கூட்டி, அதில் புதிய கட்சி ஆரம் பிக்கின்றமை பற்றிய அறிவிப்பை விடுத்து கட்சி அரசியல் செய்தமை தவறு)

* தமிழ் மக்கள் பேரவையில் அங்கத்தவர்களாகச் சேர்வதற்குப் பொதுமக்கள் கொடுத்த விண்ணப்பப் படிவங்களில் இருந்து, அவர்கள் பற்றிய தகவல்கள், மின்னஞ்சல் முகவரிகள் போன்றவற்றைப் பெற்று, அந்த முகவரிகளுக்கு தமது கட்சியில் சேர்வதற்கான அழைப்புகளையும் விண்ணப்பப் படிவங்களையும் பேரவையின் இணைத் தலைவரான விக்னேஸ்வரன் அனுப்பி வைத்தமை, அவர் பேரவையை அரசியல் கட்டமைப்பாகவே பயன்படுத்துகின்றார் என்பதற்கு ஆதாரபூர்வமான நல்ல சான்று.

* இப்போது, தமது புதிய கட்சியான தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமாகத் தம்மைத் தாமே பிரகடனப்படுத்திய பின்னர், அந்தக் கட்சியின் செயலாளர் நாயகமாகவும், அதேசமயம் தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவராகவும் இருந்து கொண்டு, தமது கட்சிக்கு அரசியல் பலம் தரக்கூடிய நோக்கம் கொண்ட 'எழுக தமிழ்' என்ற ஒரு நிகழ்வை தாம் இணைத்தலைவராக இருக்கும் பேரவைமூலம் நடத்த முயல்கின்றார் அவர்.

* போதாக்குறைக்கு, 'எழுக தமிழ்' நிகழ்வை ஏற்பாடு செய்வது 'தமிழ் மக்கள் பேரவை' என்ற மக்கள் இயக்கமே எனவும், அது அரசியல் கட்சி சார்ந்த கட்டமைப்பு அல்ல எனவும் கூறிக்கொண்டு, அந்தச் சித்தாந்தத்தின் அடிப்படையில் அடுத்த மாதம் நடுப்பகுதியில் நடத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ள 'எழுக தமிழ்' நிகழ்வுக்கு ஆதரவு தாருங் கள் என்று பேரவையின் முக்கிய பிரதிநிதிகள் சிலர் மாவை சோனாதிராசாவைப் போய்ச் சந்தித்துக் கோரியிருக்கின்றார்கள் என்றும் தகவல்.

நீதியரசர் விக்னேஸ்வரன் அடித்துக் கூறுகின்றமை போல தமிழ் மக்கள் பேரவை மக்கள் இயக்கம் மட்டுமே, அரசியல் கட்சி அல்ல என்பது உண்மையானால் – அந்தத் தகுதி நிலையைப் பேரவை தொடர்ந்து பேணுவதற்காக – இப்போது ஓர் அரசியல் கட்சியைத் ஸ்தாபித்து, அதன் செயலாளர் நாயகமாகத் தன்னை பிரகடனப்படுத்தியிருக்கும் நீதியரசர் விக்னேஸ்வரன், தனது கட்சிகள் சார் நிலையைக் கருத்தாகக் காட்டி, அதனடிப்படையில் பேரவையின் இணைத் தலைவர் பதவியிலிருந்து விலக வேண்டும். பேரவையில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சித் தலைவர்களான சுரேஷ், சித்தார்த்தன் போன்று சாதாரண உறுப்பினராகப் பேரவையில் அவர் இடம் பெறலாம்.

அதைவிட்டு, பேரவை இணைத் தலைவர், கட்சியின் பொதுச் செயலாளர் என்ற இரு தோணிகளில் ஒரே சமயத்தில் கால் வைக்கும் எத்தனத்தில் அவர் தொடர்ந்து ஈடுபடுவாராயின் அதைவிட மோசமான செயல் வேறு இருக்கமுடியாது எனலாம்.

# காணாமற்போனோரின் உறவுகள் போராட்டம் சகலரையும் பங்கேற்குமாறு விக்கி அழைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 30

வடக்கு–கிழக்கின் காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் சங்கங்கள் ஒன்றிணைந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சர்வதேச தினமான இன்று வெள் ளிக்கிழமை காலை 10 மணிக்கு ஓமந்தை மற்றும் கல்முனை ஆகிய இடங்களில் நடத்த விருக்கும் போராட்டங்களில் சகல பொதுமக்களும் கலந்துகொள்ளவேண்டும் என்று வடமாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாய கமுமான நீதியரசர் க.வி விக்னேஸ்வரன் வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

இந்தப் போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்து வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவித்திருக்கும் விக்னேஸ்வரன், தனது கட்சி உறுப்பினர்கள் ஓமந்தைப் போராட்டத்தில் கலந்து கொள்ளவிருக்கின்றனர் என்றும் குறிப்பிட்டிருக்கின்றார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

காணாமற்போனவர்களின் சர்வதேச தினம் ஓகஸ்ட் 30 ஆம் திகதி கடைபிடிக்கப்படுகின்றது. பல்வேறு நெருக்கடியான சூழ்நிலைகளில் காணாமல் ஆக்கப்பட்ட அவர்களின் கதி என்னவென்று அவர்களின் உறவினர்களோ அல்லது சட்டப்பிரதிநிதிகளோ தெரியாமல் இருப்பவர்கள் தொடர்பில் சர்வதேச ரீதியாக ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த தினத்தின் நோக்கம்.

இலங்கையில் தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் பல்வேறு சந்தர்ப்பங்களில் அரச படைகளினால் ஏராளமான தமிழ் மக்கள், சரண் அடைந்த முன்னாள் போராளிகள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ள போதிலும், 2009ஆம் ஆண்டு இறுதிப் போர் நடைபெற்றபோது பள்ளிக்கூடங்கள், வைத்தியசாலைகள் போன்ற பல்வேறு இலக்குகளுக்குக் குண்டடித்து, இராசாயனப் போர்க்கருவிகள் பாவித்து இறந்தவர்கள் போகத் திட்டமிட்டமுறையில் பல்லாயிரக்கணக்கான எமது மக்கள் காணாமல் ஆக்கப்பட்டனர்.

ஆனால் அரச படைகளிடம் அகப்பட்ட, சரணடைந்த – கையளிக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்று கூற அரசு முன் வராது இருக்கின்றது.

இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நிலைமை என்னவென்று தெரியாமல் கடந்த 10 வருடங்களாக பிள்ளைகளை இழந்த பெற்றோரும், பெற்றோரை இழந்த பிள்ளைகளும், தமது உடன்பிறப்புக்களை இழந்தவர்களுமாக இராணுவ முகாம்களுக்கும், பொலிஸ் நிலையங்களுக்கும், சிறைச்சாலைகளுக்கும், தடுப்பு முகாம்களுக்கும், நீதிமன்றங்களுக்கும் அலைந்து திரிந்து எமது மக்கள் களைத்துப்போய்விட்டார்கள்.

வீதிகளில் இறங்கி நின்று வருடக் கணக்கில் போராட்டங்களை மேற்கொண்டும் எந்தப் பயனும் கிடைக்கவில்லை. தமது பிள்ளைகளைத் தேடி அலைந்து எந்த ஒரு பதிலும் கிடைக்காமல் எத்தனையோ தாய்மார்களும் தந்தைமார்களும் பெரும் மனச்சுமைகளுடன் கடந்தகாலங்களில் இறந்துபோய் இருக்கின்றார்கள்.

காணாமற்போனவர்களுக்கு என்ன நடந்தது என்று ஆட்சிக்கு வந்த எந்த ஒரு அரசும் இதுவரையில் பதில் கூற முன்வரவில்லை. காணாமற்போனதாக கூறப்படும் எவரும் நாட்டின் எந்த சிறைகளிலும் இல்லை என்று அரசு கூறி இருக்கின்றது. ஆனால், இறுதிப் போரில் தமது பிள்ளைகளை உயிருடன் இராணுவத்திடம் கையளித்தமைக்கான ஆதாரங்களை சாட்சிகளை வைத்துக் கொண்டே தமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்று கேள்வி எழுப்பி வருகின்றார்கள் எம்மவர்கள்.

இவர்கள் சிறையில் இல்லை என்றால், தமது கட்டுப்பாட்டுக்குள் எடுத்த படையினரின் கையில் இல்லை என்றால் படையினர் இவர்களை என்ன செய்தனர் என்று அரசு பதில் கூற வேண்டும்.

ஐ.நா மனித உரிமைகள் சபையில் கொண்டு வரப்பட்ட தீர்மானம் தொடர்பிலான நடவடிக்கைகளை கண்துடைப்பு நடவடிக்கைகளாக வும் சர்வதேச சமூகத்தினை ஏமாற்றும் ஒரு நடவடிக்கையாகவுமே காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகங்களை வடக்கு – கிழக்கில் அரசு திறந்துவருகின்றது.

ஆகவேதான், காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தை எமது மக்களும் நானும் ஆரம்பம் முதலே எதிர்த்து வந்தோம். இன்று பல வருடங்கள் கடந்துள்ள நிலையில் எமது இந்த அலுவலகங்களின் செயற்பாடுகள் எமது குற்றச்சாட்டுகளை நிரூபித்துள்ளன. பல்லில்லாத பாம்புகளாகவே காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகங்கள் காட்சியளிக்கின்றன.

ஆகவே, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில் ஐ.நா மனித உரிமைகள் சபையும் ஏனைய சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்களும் காத்திரமான ஒரு தலையீட்டைமேற்கொண்டு எமது மக்களுக்கு அரசு பொறுப்பு கூறுவதற்கு நிர்ப்பந்திக்கவேண்டும்.

அரசை நம்பி இனிமேல் பயனில்லை என்ற முடிவுக்கு எமது மக்கள் வந்துவிட்டார்கள். அவர்கள் பொறுமை இழக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டார்கள். அவர்களின் நியாயமான கோரிக்கைகளையும் அவர்களின் துயரங்களையும் சர்வதேச சமூகம் இனிமேலும் தட்டிக்கழித்துவிடக் கூடாது.

வடக்கு கிழக்கின் காணாமல் ஆக்கப்பட்டசங்கங்களின் உறவினர்கள் ஒன்றிணைந்து ஓகஸ்ட் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வடக்கு – கிழக்கு இணைந்த போராட்டம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் கல்முனையிலும் வவுனியா மாவட்டத்தில் ஓமந்தையிலும் போராட்டங்கள் நடை பெறவுள்ளன. இதற்கு சகல தரப்பினரும் எந்த விதமான கட்சி வேறுபாடுகளும் அரசியல் வேறுபாடுகளும் இன்றி தமது முழுமையான ஆதரவை வழங்கவேண்டும்.

தமிழ் மக்கள் கூட்டணி இந்த போராட்டத்துக்கு முழுமையான ஆதரவை வழங்குகின்றது. எனது கட்சியின் உறுப்பினர்கள் இந்தப் போராட்டங்களில் கலந்துகொள்ள இருக்கின்றார்கள்.

எனது தனிப்பட்ட காரணங்களினால் நான் பங்குபற்ற முடியாமைக்கு வருந்துகின்றேன். பொதுமக்கள் அனைவரும் இந்தப்போராட்டத்தில் கலந்துகொள்ளவேண்டும் என்று விநயமுடன் வேண்டுகோள் விடுக்கின்றேன்– என்றுள்ளது. (ஐ)

# சீனாவின் நிதியுதவியுடன் 2,000 வீடுகள் அமைப்பு

கொழும்பு, ஓக. 30

சீனாவின் நிதியுதவியுடன் 2,000 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

மொரட்டுவை, பேலியகொடை, திம்பிரிகஸ்ஸாய, மகரகம ஆகிய இடங்களில் இந்த வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இது தொடர்பாக நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

குறைந்த வருமானத்தைக் கொண்ட நபர்களுக்காக சீனா நிதியுதவி வேலைத்திட்டத்தின் கீழ் 2,000 வீடுகளை நிர்மாணிப்பதற்காக நிதியுதவிகளை வழங்குவதற்குச் சீன அரசு உடன்பட்டுள்ளது.

இதற்காக மொறட்டுவை, பேலியகொடை, திம்பிரிகஸ்ஸாய, மகரகம பிரதேச செயலாளர் பிரிவுகளில் காணிகள் அடையாளங் காணப்பட்டுள்ளதுடன் பேலியகொடை மற்றும் மாநகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ள காணியில் நிர்மாணப் பணிகளுக்காகத் தயார் செய்யப்பட்டுள்ளன. (ஐ)

## நாளை

31.08.2019
சனிக்கிழமை

நட்சத்திரம்: பூரம் சித்தம் பி.ப. 4.59 வரை
திதி : பிரதமை பி.ப. 2.23 வரை

இராகுகாலம் : 3.05 – 4.35
சுப நேரம் : 9.05 – 10.35

# மிலேனியம் சவால் கொடையை இலங்கை இழக்கும் அபாயநிலை

## செப்ரெம்பர் மாதத்துக்கு முன் உடன்பாடு கைச்சாத்தாகாவிடின்

கொழும்பு, ஓக. 30

எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்குள் உடன்பாட்டில் கையெழுத்திடாவிடின், மிலேனியம் சவால் நிறுவனத்தின் (எம்சிசி) 48 கோடி டொலர் கொடையை இலங்கை இழக்கும் அபாயம் ஏற்படும் என அமெரிக்க அதிகாரி ஒருவர் எச்சரித்துள்ளார்.

மிலேனியம் சவால் நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பணிப்பாளர் ஜென்னர் எடெல்மன் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்குக் கருத்து வெளியிடுகையில்,

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் எமது சபை கூடுவதற்கு முன்னர், இலங்கை இந்த 48 கோடி டொலர் திட்டத்துக்கு அங்கீகாரம் அளிக்க வேண்டும்.

உடன்பாட்டில் கையெழுத்திடுவதற்கான அமைச்சரவை அனுமதிக்காக நாங்கள் காத்திருக்கிறோம்.

இந்தத் திட்டத்துக்கு அனுமதி பெற முடியாவிட்டால், இந்த வளங்களை வேறு இடங்களில் பயன்படுத்துமாறு எமது சபையின் உறுப்பினர்கள் பரிந்துரைக்கலாம். சபை எந்த நிலைப்பாட்டை எடுக்கும் என்று எங்களுக்குத் தெரியவில்லை.

மிலேனியம் சவால் நிறுவனத்தின் இந்தக் கொடை, இலங்கைக்கு ஒரு மூலத்தில் இருந்து இதுவரை கிடைத்த மிகப்பெரிய கொடையாகும்.

மிலேனியம் சவால் நிறுவனத்தின் கொடை, மேல் மாகாணத்தில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும், மத்திய, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களில் போக்குவரத்தை மேம்படுத்தவும், பிராந்தியத்தில் உற்பத்தியாளர்களை கொழும்பில் உள்ள வணிகமையத்தின் ஏற்றுமதி சந்தைகளுடன் இணைக்கவும் பயன்படும்.

எமது அமைப்பும், கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகமும் இதற்கு முன்னுரிமை அளித்தன. ஏனெனில் இதற்கான சாளரம் குறுகியது. இந்தத் திட்டத்தில் கையெழுத்திடுவதற்காக நாங்கள் கூட்டாக மிகவும் கடினமாக உழைத்தோம்.

மிலேனியம் சவால் நிறுவனத்தின் கொடையைப் போல, அக்சா, சோபா உடன்பாடுகளுக்குக் காலக்கெடு இல்லை என்பதால், இந்த இரண்டு இராணுவ உடன்பாடுகளைப் புதுப்பித்தல் இப்போது இடைநிறுத்தப்பட்டுள்ளது.

எங்கள் கொடை, அக்சா மற்றும் சோபாவுடன் குழப்பிக் கொள்ளப்பட்டது மிகவும் துரதிர்ஷ்டவசமானது. அவை முற்றிலும் தனித்தனியாக உள்ளன.

பல ஆண்டுகளாக அமெரிக்காவுடன் இலங்கை கொண்டிருந்த நீண்டகால உடன்பாடுகளைப் புதுப்பிக்கும் இந்த இரண்டு இராணுவ உடன்பாடுகளுக்கும், மிலேனியம் சவால் நிறுவனத்தின் கொடைக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. மிலேனியம் சவால் கொடை சுதந்திரமானது, அரசியல் சார்பற்றது-என்றார். (ஐ)

### கலகம் விளைவித்த குற்றச்சாட்டில்

## வியாழேந்திரன் எம்.பி, உட்பட ஐவருக்கு நீதிமன்றில் வழக்கு



மட்டக்களப்பு, ஓக. 30

மட்டக்களப்பு கல்லியங்காடு பகுதியில் இடம்பெற்ற எதிர்ப்புச் சம்பவம் தொடர்பில் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் வியாழேந்திரன் (அமல்) உள்ளிட்ட ஐந்து பேருக்கு நீதிவான் நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.

கலகம் ஏற்படுத்தி பொது மக்களுக்கும் பாதசாரிகளுக்கும் வீதிப் போக்குவரத்து வாகனங்களுக்கும் இடையூறு ஏற்படும் வகையில் கலகத்தை உண்டு பண்ணி இடையூறு விளைவித்தனர் என்று மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஐவருக்கும் எதிராகக் குற்றச்சாட்டை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் முன்வைத்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் வியாழேந்திரன் (அமல்), சின்னமுத்து அசோகன், யோகநாதன் றோஸ்மன், செல்வி மனோகரன் மற்றும் செல்வி சசிகலா அருள்தாஸ் ஆகியோருக்கு எதிராக இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்து பொலிஸார் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த வழக்கு விசாரணைக்காக அடுத்த வாரம் எடுத்துக் கொள்ளப்படும் போது ஐவரையும் மன்றில் முன்னிலையாகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் 21ஆம் திகதி உயித்த ஞாயிறு தினத்தில் மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் இடம்பெற்ற தற்கொலை குண்டுதாக்குதலை மேற்கொண்ட காத்தான்குடி பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய முகமது ஆசாத்தின் தலை மற்றும் உடற்பாகங்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தன.

அந்த உடற்பாகங்களை மட்டக்களப்பு கல்லியங்காடு இந்துமயானத்தில் கடந்த வியாழன் இரவு பொலிஸார் இரகசியமாக புதைத்துள்ளனர். இந்த சம்பவம் தொடர்பாக கடந்த செவ்வாய் மாலை பொது மக்களுக்கு தெரியவந்ததையடுத்து பொதுமக்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன், மாநகர சபை உறுப்பினர்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து மயானத்துக்கு முன் உள்ள வீதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டக்காரர் கள் மட்டக்களப்பு கல்லடி பாலத்தின் நடுப்பகுதியில் வீதியை மறித்து – வீதியில் படுத்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தச்சம்பவம்தொடர்பிலேயேபொலிஸார்தொடர்ந்த வழக்கில் வியாழேந்திரன் உள்ளிட்ட ஐவருக்கு எதிராக நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## மிலேனியம் சவால் உடன்பாட்டில் ஒருபோதுமே கையெழுத்திடேன்!

### 4 ஆவது தடவை மறுத்தார் மைத்திரி



கொழும்பு, ஓக. 30

மிலேனியம் சவால் நிறுவனத்தின் 48 கோடி டொலர் நிதிக்கொடையைப் பெறுவதற்கான உடன்பாட்டில் கையெழுத்திட அனுமதிக்க முடியாது என்றும், அதனை அடுத்த அரசு பார்த்துக் கொள்ளட்டும் எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில், மிலேனியம் சவால் நிறுவனத்தின் 48 கோடி டொலர் நிதிக்கொடையைப் பெறுவதற்கான உடன்பாட்டுக்கு அனுமதி கோரி, சமர்ப்பிக்கப்பட்ட பத்திரம் குறித்து, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவையின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

நான்காவது முறையாக இந்த விவகாரம் அமைச்சரவையின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்ட போதும், அதனை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிராகரித்து விட்டார்.

ஆறு வாரங்களுக்கு முன்னர் இந்த அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டபோது, அதில் ஒப்பமிட மறுத்த ஜனாதிபதி, இது குறித்து விரிவாக ஆராயப்பட வேண்டும் என்று கூறியிருந்தார்.

கடந்த வாரம், இந்த விவகாரம் குறித்து ரணில் விக்கிரமசிங்க நினைவுபடுத்தியபோது, ஒருவார கால அவகாசம் தேவை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார்.

எனினும், இந்த வாரம் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில், அவர், தேர்தல்கள் நெருங்கியுள்ள நேரத்தில் இந்த உடன்பாட்டுக்கு அவசரப்படுவதில் தனக்கு உடன்பாடு இல்லை என்றும், புதிய அரசிடம் அதனைக் கையாளும் பொறுப்பை விட்டு விடுவதே சிறந்தது என்றும் தெளிவாகக் கூறியுள்ளார்.

ஜனாதிபதியின் இந்த இறுக்கமான முடிவினால், மிலேனியம் சவால் நிதிக் கொடை வாய்ப்பை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிதிக்கொடை தொடர்பான சந்தேகங்களைத் தீர்க்க அமெரிக்க தூதுவர் அலய்னா ரெப்லிட்ஸ் முயற்சிகளை மேற்கொண்டபோதும் அது பயனளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## புலிகளின் மீள் உருவாக்கத்துக்கு முயற்சித்த குற்றச்சாட்டில் கைதானவர் விளக்கமறியலில்

மட்டக்களப்பு, ஓக. 30

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீள உருவாக்கும் நோக்குடன் சட்டத்துக்குப் புறம்பாக ஆயுதங்கள் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க கல்முனை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

கடந்தசெவ்வாய்க்கிழமைஇரவுசந்தேகநபரைச் சிறப்பு அதிரடிப் படையினர் கைது செய்து கல்முனை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வந்த நிலையில் அவரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

கல்முனை நீதிவானின் முன்னிலையில் சந்தேகநபர் முற்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் செப்ரெம்பர் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

கல்முனை பொலிஸ் பிரிவில் உள்ள 288 ஏ மாரியம்மன் கோயில் வீதி பாண்டிருப்பு-2 பகுதியை முகவரியாகக் கொண்ட தில்லைநாதன் ஆனந்தராஜ் (வயது-41) என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

அவர் தனியார் நிறுவனம் ஒன்றின் பிரதேசவிற்பனை முகாமையாளராகக் கடமையாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பயங்கரவாத அச்சுறுத்தல் தொடர்பில் தேடுதல்; கோவையில் 5 இடங்களில் நேற்றுச் சோதனை!

கோவை,ஓக.30

பயங்கரவாத அச்சுறுத்தல் தொடர்பாகக் கோவையில் 5 இடங்களில் இந்தியத் தேசிய புலனாய்வு அதிகாரிகள் (என்.ஐ.ஏ) நேற்று சோதனை நடத்தினர்.

தமிழகத்திற்குள் தீவிரவாதிகள் புகுந்துள்ளனர் என்ற சந்தேகத்தில் கடந்த சில நாள்களாக பல்வேறு இடங்ளில் சோதனை நடத்தப்பட் டது. இந்தச் சோதனைகள் நடைபெற்று வரும் நிலையில் கோவை உக்கடம், கரும்புக் கடை, பிலால்நகர் உள்ளிட்ட ஐந்து இடங்களில் என்.ஐ.ஏ. அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.



ஐ.எஸ். சித்தாந்தத்தைப் பரப்பினர் எனக் கூறி இந்த ஆண்டு மே மாதம் கோயம்புத்தூரில் இருந்து 6 பேர் மீது பதிவு செய்யப்பட்ட வழக்கு தொடர்பாக இந்த சோதனைகள் நடத்தப்பட்டன என என்.ஐ.ஏ. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இந்த 6 பேரில், சந்தேகத்திற்கிடமான தலைவரான முகமது அசாருதீன் (32), இலங்கையில் ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்பின் சூத்திரதாரி ஷஹ்ரான் ஹாஷிமின் முகப்புத்தக நண்பர் மற்றும் வை.ஷேக் ஹிதயதுல்லா ஆகியோரை என்.ஐ.ஏ. கைது செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

உமர் பாரூக், சனாபர் அலி, சமீனா முபின், முகமது யாசீர், சதாம் உசேன் ஆகியோரது வீடுகளில் நேற்றுக் காலை 5 மணி முதல் என்.ஐ.ஏ. அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்டனர்.

இவர்களுக்கும் தமிழகத்தில் புகுந்த தீவிரவாதிகளுடன் ஏதாவது தொடர்பு இருக்கின்றதா என்ற கோணத்திலும் சோதனை நடந்ததாகக் கூறப்பட்டது.

ஏற்கனவே இவர்கள் அனைவரும், இதற்கு முன்னும் மத்திய தேசிய பாதுகாப்பு முகமை அதிகாரிகள் சோதனையில் சிக்கி விசாரணைக்கு ஆளானவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அதோடு கோவை உக்கடம், வின்சென்ட் ரோட்டை சேர்ந்த ஜனாபர் அலி என்பவரது வீட்டில் முதன் முறையாக சோதனை நடைபெற்றதாகத் தெரிகிறது.

# ஐ.நாவில் காஷ்மீர் பிரச்சினையை எழுப்புவாராம் பாகிஸ்தான் பிரதமர்

## அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் தகவல்



இஸ்லாமாபாத்,ஓக.30

வலுக்கட்டாயமாக ஐ.நா. சபையில் காஷ்மீர் பிரச்சினையை இம்ரான்கான் எழுப்புவார் எனப் பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் தகவல் தெரிவித்துள்ளார்.

காஷ்மீர் மாநிலம் தொடர்பாக இந்திய அரசு எடுத்துள்ள அதிரடி நடவடிக்கையை சர்வதேச விவகாரம் ஆக்க பாகிஸ்தான் முயற்சித்து வருகிறது. இந்த நடவடிக்கை, முற்றிலும் உள்நாட்டு விவகாரம் என இந்தியா, சர்வதேச நாடுகளிடம் விளக்கி விட்டது.

இருப்பினும் பாகிஸ்தான் அடம்பிடித்து வருகிறது.

இந்த நிலையில், அந்த நாட்டின் வெளியுறவு மந்திரி ஷாமக்மூத் குரேஷி, இஸ்லாமாபாத்தில் நேற்று முன்தினம் இவ்விடயம் குறித்து நிருபர்களுக்குப் பேட்டி அளித்தார்.

அப்போது அவர், ஐ.நா. பொதுச் சபையில் அடுத்த மாதம் பேசுகிறபோது பிரதமர் இம்ரான்கான், காஷ்மீர் பிரச்சினையை வலுக்கட்டாயமாக எழுப்புவார் என்று கூறினார்.

மேலும், சிம்லா உடன்படிக்கையின்படி, காஷ்மீர் பிரச்சினையை பாகிஸ்தானும், இந்தியாவும் இரு தரப்பும்தான் தீர்த்துக்கொள்ள வேண்டும். இந்த நிலையில் 5 ஆம் திகதி எடுத்த நடவடிக்கை இரு தரப்பு நடவடிக்கையா அல்லது ஒருதலைப்பட்சமானதா என்பதை சர்வதேச நாடுகளிடம் பிரதமர் மோடி கூற வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.



# அமைச்சர்கள் தம் உறவினர்களை அரச பணியில் நியமிக்கக்கூடாது

## பிரதமர் மோடி அதிரடி அறிவிப்பு



புதுடில்லி, ஓக. 30

மத்திய அமைச்சர்கள் தங்கள் உறவினர்களை அரச பணியில் நியமிக்கக்கூடாது எனப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

டில்லியில் இடம்பெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

மத்திய அமைச்சர்கள் தங்களது உறவினர்களை அரச பணியில் நியமிக்க கூடாது.

அதிகாரிகளை ஊக்கப்படுத்த வேண்டும். மத்திய அமைச்சர்கள் தினமும் அலுவலகத்துக்கு காலை 9.30 மணிக்குள் வரவேண்டும். சிலர் இதனைக் கடைப்பிடிக்கிறார்கள். அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும்.

காஷ்மீர் மாநிலத்தின் முன்னேற்றத்திற்காக பல திட்டங்களை செயல்படுத்த மத்திய அமைச்சர்கள் தங்களது சேவைகளை வழங்க வேண்டும்– என்றார். (ஐ)

# கராச்சிக்கு மேலான விமானத் தடம்; 4 நாள்களுக்கு மூடியது பாகிஸ்தான்

இஸ்லாமாபாத்,ஓக.30

கராச்சிக்கு மேலே மூன்று விமான வழிப்பாதைகளை பாகிஸ்தான் மூடியுள்ளது.

பாகிஸ்தான் பாலகோட் பகுதியில் இந்திய விமானப்படை தாக்குதல் நடத்தியமையைத் தொடர்ந்து, பாகிஸ்தான் தனது விமான வழிப்பாதையை முற்றிலுமாக மூடியது. பின்னர், சில நாடுகளுக்காகத் திறந்து விட்டாலும், இந்தியாவுக்குத் தடையை தொடர்ந்தது. பின்னர் ஜூலை 16 ஆம் திகதிதான், இந்திய விமானங்களுக்கு தனது பாதையை முழுவதுமாகத் திறந்து விட்டது.

இதற்கிடையே, காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்தை இந்தியா ரத்து செய்ததால், இரு நாடுகளுக்கு இடையே மீண்டும் பதற்றம் நிலவி வருகிறது. இந்திய விமானங்களுக்கு தனது பாதையை முற்றிலுமாக மூடுவது பற்றி பாகிஸ்தான் மந்திரி சபை ஆலோசனை நடத்தியது.

இந்நிலையில், கராச்சி நகருக்கு மேலே 3 விமான வழிப்பாதைகளை பாகிஸ்தான் மூடியுள்ளது. நேற்று முன்தினம் முதல் நாளை 31 ஆம் திகதி வரை 4 நாள்களுக்கு இத்தடை நடைமுறையில் இருக்கும். இதனால் சர்வதேச விமானங்கள், கராச்சியை சுற்றி மாற்று வழியில் செல்ல வேண்டி இருக்கும்.

# ராஜீவ் கொலை வழக்கின் ஏழு ஆயுள் கைதிகளையும் விடுதலை செய்யக் கோரும் நளினியின் மனு தள்ளுபடி

சென்னை,ஓக30

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் கைதிகள் 7 பேரையும் விடுவிக்க கோரி நளினி தொடர்ந்த மனுவை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலையில் கைது செய்யப்பட்ட முருகன், சாந்தன் ஆகியோர் வேலூர் ஆண்கள் சிறையிலும், முருகனின் மனைவி நளினி பெண்கள் சிறையிலிலும் அடைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் 27 ஆண்டுகளாக சிறையில் தண்டனை அனுபவித்து வருகின்றனர். இவர்கள் உள்பட ராஜீவ்காந்தி கொலை வழக்கில் 7 பேர் விடுதலைக்காகப் போராடி வருகின்றனர்.



இந்த நிலையில், தமிழக அரசு நிறைவேற்றிய தீர்மானத்தின் படி தங்களை விடுவிக்க வேண்டும் என்று நளினி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து இருந்தார். இந்த மனு மீதான விசாரணையின் போது, 7 பேர் விடுதலை தொடர்பாக ஆளுநரிடம் விளக்கம் கோர முடியாது என தமிழக அரசு கூறியது. மேலும், முன்கூட்டியே விடுதலை செய்ய ஆயுள் தண்டனை கைதிகள் உரிமை கோர முடியாது எனவும் தமிழக அரசு கூறியிருந்தது.

இந்தச் சூழலில், நளினியின் மனுவை சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் சுப்பையா, சரவணன் அமர்வு தள்ளுபடி செய்துள்ளது.

# பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தை 6 வாரங்கள் முடக்க இணக்கம்?

## எலிஸபெத் மகாராணி ஒப்புதல் அளித்துள்ளாராம்



லண்டன், ஓக.30

பிரிட்டிஷ் பிரதமர் போரிஸ் ஜோன்சனின் கோரிக்கையை ஏற்று, இங்கிலாந்து நாடாளுமன்றத்தை சுமார் 6 வார காலம் முடக்குவதற்கு ராணி இரண்டாம் எலிஸபெத் ஒப்புதல் அளித்துள்ளார் எனத் தகவல் வெளியாகி உள்ளது.

ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து விலக கடந்த சில ஆண்டுகளுக்கு முன் இங்கிலாந்து முடிவு செய்தது. பின்னர் ‘பிரெக்ஸிட்’ பிரேரணை தாக்கல் செய்து, நாடாளுமன்ற ஒப்புதலை பெற பலமுறை வாக்கெடுப்பு நடந்தது. ஆனால் அப்போதைய பிரதமர் தெரசா மே அரசு அதில் தோல்வியடைந்தது. இதையடுத்து தெரசா மே கடந்த மாதம் தன் பிரதமர் பதவியை ராஜினாமா செய்தார்.

அதன் பிறகு இங்கிலாந்தின் முன்னாள் வெளியுறவுத்துறை மந்திரி போரிஸ் ஜோன்சன் பிரதமராகப் பதவியேற்றார். பதவியேற்ற சில மாதங்களுக்குள்ளாக பிரெக்ஸிட்டை நிறைவேற்ற வேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு ஏற்பட்டது. இல்லையென்றால் ஐரோப்பிய ஒன்றியத்தை விட்டு ஒப்பந்தம் இல்லாமல் வெளியேறும் முடிவை எடுக்க வேண்டும்.



இந்தச் சூழ்நிலையில், வரும் ஒக்டோபர் 31 ஆம் திகதி ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து இங்கிலாந்து விலகுவது உறுதி என அந்நாட்டு பிரதமர் போரிஸ் ஜோன்சன் ஏற்கனவே அறிவித்திருந்தார். ஒக்டோபர் மாதம் 14 ஆம் திகதி வரை இங்கிலாந்து நாடாளுமன்றத்தை முடக்கி வைக்க வேண்டும் என ராணி இரண்டாம் எலிஸபெத்துக்கு, பிரதமர் போரிஸ் ஜோன்சன் கோரிக்கை விடுத்தார்.

இந்நிலையில், பிரதமர் போரிஸ் ஜோன்சனின் கோரிக்கையை ஏற்ற ராணி இரண்டாம் எலிஸபெத், இங்கிலாந்து நாடாளுமன்றத்தை ஒக்டோபர் 14 ஆம் திகதி வரை முடக்கி வைக்க ஒப்புதல் அளித்துள்ளார் எனத் தகவல்கள் வெளியாகி உள்ளன.




# பிரான்ஸுக்கு நிபந்தனை விதிக்கின்றது பிறேசில்!



றியோ டி ஜெனிரோ, ஓக. 30

அமேசன் வானந்தரம் பிறேசிலுக்குச் சொந்தமானது இல்லை என்று பிரான்ஸ் ஜனா திபதி இம்மானுவெல் மக்ரோன் தெரிவித்த கருத்தை மீளப் பெற்றால் மாத்திரமே அமேசன் காட்டுத் தீயை அணைக்க ஜி-7 நாடுகள் வழங்கும் 2 கோடி 20 இலட்சம் அமெரிக்க டொலர் உதவியை ஏற்றுக் கொள்வதாக பிறேசில் ஜனாதிபதி ஜயர் போல்சனாரோ தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஜனாதிபதி மக்ரோனின் கருத்து ‘அவமதிப்பானது’ என்றும் போல்சனாரோ குறிப்பிட்டுள்ளார்.

போல்சனாரோவின் இந்த அறிவிப்பு, ஜி-7 மாநாட்டில் அமேசன் காட்டுத்தீயை கட்டுப்படுத்த, 2 கோடி 20 இலட்சம் அமெரிக்க டொலர் நிதியை பிறேசில் அரசு ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என போல்சனாரோவின் தலைமை அதிகாரியொருவர் தெரிவித்த பின்னரே வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கு முன்னர், சுற்றுச்சூழல் மற்றும் பாதுகாப்புத்துறை அமைச்சர்கள் ஊடகங்களுக்கு அளித்த செவ்வியில் பிறேசில் இந்தப் பணத்தை ஏற்றுக் கொள்வதாகத் தெரிவித்திருந்தனர்.

எனவே இது தொடர்பாக பிறேசில் அரசினுள்ளேயே மாறுபட்ட கருத்துகள் இருக்கின்றமை தெரிவந்துள்ளது. எனினும் இந்த விடயம் பற்றி இன்னும் தெளிவானஎந்தஒருமுடிவும்எட்டப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

காலைக்கதிர் Kalaikathir



# கண்ணீருடன் காத்திருக்கும் எம் உறவுகள்!

## சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் இன்றாகும்



சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகின்றது.

1981ஆம் ஆண்டு கொஸ்டாரிக்காவில் தடுத்து வைக்கப்பட்ட கைதிகள் காணாமற்போனபின்னர் இவ்வாறானதொரு தினம் சர்வதேச ரீதியில் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், இலங்கையில் காணாமற்போன உறவுகளைத் தேடி வடக்கு, கிழக்கில் கடந்த 6 மாதங்களுக்கு மேலாக தொடர்ச்சியாக கவனவீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியிலும் இறுதிக்கட்ட யுத்தத்தின் போதும் யுத்தத்திற்குப் பின்னரும் விசாரணைக்கென கூறி பல்வேறு சந்தர்ப்பங்களில் தமது உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர் என மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

எனினும், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் எங்கே உள்ளனர் என்பது குறித்தும் அவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பது தொடர்பிலும் அரசாங்கத்தால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படாமை சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயமாகும்.

கடந்த அரசாங்கத்தில் உருவாக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில், சுமார் 20,000 பேர் காணாமற்போயுள்ளனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் கடந்த அரசாங்கம் பல்வேறு வாக்குறுதிகளை தமிழ் மக்களுக்கு வழங்கிய போதிலும் அவை நிறைவேற்றப்படாத நிலையில், அவர்களின் ஆட்சியும் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

இதன் பின்னர், நல்லாட்சி அரசாங்கத்தின் அனுசரணையுடன் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவையில் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களை நிறைவேற்றுவதாகக் குறிப்பிட்டிருந்தனர்.

இந்த நிலையில், ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை வழங்கிய வாக்குறுதிக்கமைய, காணாமற்போனோர் தொடர்பான அலுவலகத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

காணாமற்போனோர் அலுவலகம் தொடர்பான சட்டமூலம் 2016 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 26 ஆம் திகதி வெளியிடப்பட்டபோதிலும் அலுவலகம் ஸ்தாபிக்கப்படவில்லை.

காணாமற்போனோர் அலுவலகம் தொடர்பான திருத்த சட்ட மூலத்திற்கு நாடாளுமன்றம் கடந்த 1917 ஜுன் 21 ஆம் திகதி அங்கீகாரம் வழங்கியிருந்தது.

காணாமற்போன ஆள்கள் தொடர்பான அலுவலகத்தின் செயற்பாடுகள் தொடர்பில் ஏதேனும் குற்றவியல் அல்லது குற்றவியல் பொறுப்பை எழுப்பலாகாது என இதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காணாமற்போன ஆள்கள் பற்றிய அலுவலகத்துடன் தொடர்புடையோர், இரகசியத் தன்மையைப் பேணிப்பாதுகாப்பதுடன் அதற்கு உதவ வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், திருத்த சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்ட போது உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்த கருத்துக்கள் பலரின் விமர்சனங்களுக்கு உள்ளாகின.

காணாமற்போனோர் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பது காணாமற்போனோர் தொடர்பான அலுவலகத்தின் பொறுப்பென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

### அவர்களுக்கு எப்போது விடிவு?

அத்துடன், குற்றச்செயல்கள் பற்றி விசாரிக்கும் அதிகாரம் அலுவலகத்திற்குக் கிடையாதெனவும் பிரதமர் சபையில் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, காணாமற்போனோர் தொடர்பான அலுவலகம், நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏதுவான கட்டமைப்போ அல்லது பொறுப்புக்கூறலுக்கான அமைப்போ அல்லவென அப்போதைய மீள்குடியமர்வு அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

அத்துடன், சிவில் அல்லது குற்றவியல் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது எனவும், தகவல் அறியும் சட்டத்தின் கீழோ அல்லது நீதிமன்ற செயற்பாட்டின் ஊடாகவோ தகவல்களைப் பெற முடியாது எனவும் அமைச்சர் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், காணாமற்போனோர் அலுவலகம் தொடர்பில் பல்வேறு தரப்பினராலும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டதுடன், குறித்த அலுவலகத்தில் தமக்கு நம்பிக்கை இல்லை எனவும் மக்கள் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

1983 ஆம் ஆண்டு நாட்டில் இடம்பெற்ற கலவரங்களில் 7 தமிழர்கள் மாத்திரமே உயிரிழந்துள்ளனர் என நாடாளுமன்றத்தில் அமைச்சர் கயந்த கருணாதிலக்க அறிவித்திருந்தார்.

இந்த விடயம் பல்வேறு தரப்பினரின் விமர்சனத்திற்குள்ளாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

ஆயுதக்கலவரங்கள் முடிவுக்கு வந்து 10 ஆண்டுகள் கடந்த போதும், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினை தொடர்பில் உரிய முறையில் கவனம் செலுத்தப்படவில்லை என தமிழ் தேசியக் கூட்டமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள் ளது.

2010 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை இவர்களின் பிரச்சினை தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

எனினும், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் உண்மை நிலை அறியாமல், நீதி மறுக்கப்பட்டவர்களாகக் காணப்படுகின்றமை கவலையளிப்பதாக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் அரசாங்கம் உரிய கவனம் செலுத்த வேண்டும் எனவும் படையினரிடம் கையளிக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மையை மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் எனவும் அறிக்கையில் அப்போதைய எதிர்க்கட்சி தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், சர்வதேச காணாமற்போனோர் தினத்தை முன்னிட்டு வடக்கு கிழக்கு பகுதியில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தமது உறவுகளை மீட்டுத்தருமாறு கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

❃

# சவேந்திர சில்வாவை தளபதியாக்கியமை பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவமதிப்பு!

## ஐ.நா. நிபுணர்கள் குழு சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 30

இலங்கையின் புதிய இராணுவத் தளபதியாக சவேந்திர டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளமை குறித்து ஐக்கிய நாடுகள் நிபுணர்கள் குழு கடும் கவலை வெளியிட்டுள்ளதுடன், இந்த நியமனம் பாதிக்கப்பட்ட மக்களை அவமதிக்கும் விதத்தில் அமைந்துள்ளது என்றும் கூறியுள்ளது.

ஐ.நாவின் உண்மை நீதி இழப்பீடு மற்றும் மீள நிகழாமைக்கான விசேட அறிக்கையாளர் பாபியன் சல்வியோலி , பலவந்தமாகக் காணாமல் போகச்செய்யப்படுதல் தொடர்பான ஐ.நாவின் செயற்குழுவின் உறுப்பினர்கள், சட்டவிரோதப் படுகொலைகளுக்கான ஐ.நாவின் விசேட அறிக்கையாளர், சித்திரவதை தொடர்பான ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் உட்பட ஐ.நாவின் பல நிபுணர்கள் இணைந்து இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

ஓகஸ்ட் 18 ஆம் திகதி இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இலங்கையின் புதிய இராணுவத் தளபதியாக நியமித்துள்ளார் என தெரிவித்துள்ள ஐ.நா. நிபுணர்கள் இலங்கையின் 25 வருட கால உள்நாட்டுப் போரின்போது அவர் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டார் எனக் குற்றம்சாட்டப்படுவதால் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் உட்பட பலர் இந்த நியமனம் குறித்து கரிசனை வெளியிட்டுள்ளனர் எனவும் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ளும் சவேந்திர சில்வாவை இலங்கை இராணுவத்தின் உயர் பதவிக்கு நியமித்தமை பாதிக்கப்பட்ட மக்களை அவமரியாதை செய்யும் நடவடிக்கை எனவும் ஐ.நா. நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது இலங்கையில் குற்றங்களில் ஈடுபட்டவர்கள் நீதியின் பிடியிலிருந்து விடுவிக்கப்படும் கலாசாரம் நீடிப்பதை காண்பிக்கின்றது என தெரிவித்துள்ள ஐ.நா. நிபுணர்கள் குழுவினர், இது அரச நிறுவனங்கள் மீதான சமூகத்தின் நம்பிக்கைக்குப் பாதிப்பை ஏற்படுத்தி மேலும் ஸ்திரமின்மையை ஏற்படுத்தலாம் எனவும் குறிப்பிட்டுள்ளனர். சவேந்திர சில்வா மீதான குற்றச்சாட்டுகள் குறித்து உரிய முறையில் விசாரணைகள் இடம்பெறவில்லை எனவும் ஐ.நா. நிபுணர்கள் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

போரின்போது இடம்பெற்ற பாரதூரமான மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களுக்கு பொறுப்புக் கூறுவதற்கு இலங்கை தானாக முன்வந்தது எனத் தெரிவித்துள்ள ஐ.நா. நிபுணர்கள் குழுவினர், இந்த குற்றங்கள் குறித்து விசாரணை செய்து நீதியை நிலைநாட்டுவதில் போதியளவு முன்னேற்றம் இல்லாமை குறித்து கடும் கவலை வெளியிட்டுள்ளனர்.

இலங்கை அரசால் இந்தக் குற்றச்சாட்டுகளையும் ஏனைய குற்றச்சாட்டுகளையும் விசாரணை செய்ய முடியாவிட்டால் – விசாரணை செய்வதற்கு இலங்கை அரசு விரும்பாவிட்டால் சர்வதேச சமூகம் இந்த குற்றங்களுக்குப் பொறுப்புக்கூறப்படுவதை உறுதி செய்வதற்காகச் சர்வதேச நியாயாதிக்கம் உட்பட ஏனைய வழிமுறைகளை ஆராயவேண்டும் எனவும் ஐ.நா. நிபுணர்கள் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

# எமக்கு அச்சுறுத்தல் விடுக்கிறார் டக்ளஸ்

## காணாமற்போனவர்களின் உறவுகள் குற்றச்சாட்டு



முல்லைத்தீவு, ஓக. 30

முல்லைத்தீவு மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சங்கத் தலைவிக்கு எதிராகப் பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு செய்துள்ளார் எனக் கூறி, உறவுகளைத் தேடி வரும் எமக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளார் டக்ளஸ் தேவானந்தா. அவர் அதிகாரத்தில் இருந்தபோது என்னென்ன செய்தார் என்று அவரது மனச்சாட்சிக்குத் தெரியும் என வடக்கு–கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சங்கத் தலைவி கலாரஞ்சினி தெரிவித்தார்.

யாழ்.ஊடக மையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா அதிகாரத்தில் இருந்தபோது பல இளைஞர்களைக் கடத்திப் படுகொலை செய்தார் என முல்லைத்தீவு மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சங்கத் தலைவி அண்மையில் ஊடகவிலாளர் மாநாட்டில் தெரிவித்திருந்தார். அது ஊடகங்களில் வெளியானதையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தாம் இந்தப் பெண்மணி மீது கொழும்பு பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளார் எனவும் அதில் தாம் கடத்தியமைக்கான ஆதாரங்கள் இருந்தால் சமர்ப்பிக்குமாறும் கோரியுள்ளார் எனவும் ஊடகங்கள் வாயிலாகத் தெரிவித்திருந்தார்.

இவரது செயற்பாடு கடந்த காலங்களில் எவ்வாறு இருந்தது என்று அவருக்கு நன்றாகவே தெரியும். அதே போன்று மக்களும் நன்றாக அறிவார்கள். காணாமற்போன உறவுகளைத் தேடிவரும் எம்மைப் போன்ற குடும்பத்தினர் மீது அதிகாரங்களைத் திணித்து எமது போராட்டங்களை மழுங்கடிக்க முயற்சிக்கின்றார். பொலிஸில் முறையிட்டுள்ளேன் என்பதன் ஊடாக டக்ளஸ் தேவானந்தா எமக்கு அச்சுறுத் தல் விடுத்துள்ளார். தமிழ் இனத்தைச் சேர்ந்தவராக இருந்துகொண்டு எமது கண்ணீரில் வேடிக்கை பார்க்கிறார்.

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த பெண் அமைச்சரான விஜயகலா மகேஸ்வரன் தனது கணவரைக் கொன்றவர் இந்தப் நாடாளுமன்றத்திலேயே இருக்கின்றார், அவர் பல கொலைகளுடன் சம்பந்தப்பட்டும் உள்ளார் எனப் பகிரங்கமாக அவருடன் வாதாட்டம் செய்துள்ளார்.

அதற்கு முழுமையாகப் பதிலளிக்காத நாடாளுமன்ற உறுப்பினர் எம்மிடம் ஆதாரங்களைக் கேட்கின்றார். அவர் பொலிஸார் ஊடாக விடுத்துள்ள சவாலை எதிர்கொள்ள நாம் தயாராக இருக்கின்றோம் ஏட்டிக்குப் போட்டியாக நாம் கருத்துக்களை வெளியிடுவதற்கு அரசியல்வாதிகள் அல்லர். நாம் உறவுகளை தொலைத்த நிலையில் நீண்டகாலமாக தேடிப் போராடி வருகின்றோம் இன்று வரை எமக்கான நீதி கிடைக்கவில்லை.

இந்நிலையில் வடக்கு–கிழக்கு மாகாணங்களில் மூன்று வருடங்களாக வீதிகளில் போராடி வருகின்றோம். எமது போராட்டத்துக்கு எங்கள் தமிழ்த் தலைமைகளும் நீதியை இன்றுவரை பெற்றுத்தரவில்லை. நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டபோதும் எமது பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கவில்லை–என்றார்.(ஐ–07)

# ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியை தீர்மானிப்பது சுதந்திரக் கட்சியே!

## கூறுகின்றார் ஜனாதிபதி மைத்திரிபால



கொழும்பு, ஓக. 30

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியைத் தீர்மானிக்கும் சக்தியாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே இருக்கும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

எனவே வலிந்து சென்று எவருடனும் பேச்சு நடத்தவேண்டிய அவசியம் தமக்குக் கிடையாதென்றும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி மாளிகையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழு கூட்டத்திலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்–

மொட்டு உட்பட இரு கட்சிகளின் வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளார்கள். எனினும் அவர்களால் மக்கள் மத்தியில் எடுபட முடியவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் வேட்பாளர் நியமனம் தொடர்பாகப் பெருயுத்தம் இடம்பெற்று வருகிறது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியைத் தீர்மானிக்கும் சக்தியாக நாமே உள்ளோம். அதனாலேயே எம்முடன் பேச்சில் ஈடுபட அனைத்துக் கட்சிகளும் முன்வருகின்றன.

அத்தோடு நாம் யாரை ஆதரிக்க வேண்டுமென்ற தீர்மானத்தை உரிய நேரத்தில் எடுப்போம்–என்றார். (ஐ)

# சாரணர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை

*யாழ்ப்பாணம், ஓக. 30*

*யாழ். மாவட்டத்தில் சேவை செய்த சாரணர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நல்லை ஆதீன மண்டபத்தில் நாளை சனிக்கிழமை காலை 10 மணி 11 நிமிடத்துக்கு நடைபெறும் என்று யாழ். மாவட்ட சாரணர் ஒன்றியம் அறிவித்துள்ளது.*

*(இ)*






*சுற்றுலா விஸாவில் வியாபாரம்;*

# இந்தியர்கள் இருவருக்கு தலா 50 ஆயிரம் தண்டம்

யாழ்ப்பாணம், ஓக. 30

இந்தியா ராஜாஸ்தானிலிருந்து சுற்றுலா விஸாவில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட இந்தியர்கள் இருவருக்கு தலா 50 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

யாழ்ப்பாணம் மாநகரில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்ட இந்தியர்கள் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் இருவரும் சுற்றுலா விஸாவில் வருகை தந்தனர் என்பது விசாரணைகளில் தெரியவந்தது.

இந்தியர்கள் இருவரும் யாழ்ப்பாணம் நீதிமன்றில் நீதிவான் ஏ.எஸ்.பீற்றர் போல் முன்னிலையில் நேற்று முன்தினம் முற்படுத்தப்பட்டனர்.

இந்தியர்கள் இருவரும் தம் மீதான குற்றச்சாட்டை மன்றில் ஏற்றுக்கொண்டனர். அதனால் அவர்கள் இருவரையும் தலா 50 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து நீதிமன்றம் விடுவித்தது.

(ஐ)






# தென்னாபிரிக்கத் தொடரிலும் டோனிக்கு இடம் இல்லையா?

போட்டிகளுக்கு விளையாட ஏதுவாக அணி தரப்பில் மூன்று விக்கெட் கீப்பர்கள் எப்போதும் தயாராக வைத்திருக்க முக்கியத்துவம் கொடுக்கப்படும். 2020 உலகக் கிண்ண ரி - 20 தொடருக்கான செயல்திட்டம் இப்போதே வகுக்கப்பட்டு வருகின்றது. அதில் ரிஷப் இடம் பெறவே அதிக வாய்ப்புகள் உள்ளன என்று கூறியுள்ளார்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரில் டோனி இடம்பெறவாய்ப்பில்லைஎன்றுதகவல்கள்தெரிவிக்கின்றன.

உலகக் கிண்ணத் தொடரிலும் டோனி மீது சில விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. இதனால் உலகக் கிண்ணத் தொடர் முடிவடைந்ததும் மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான தொடரிலிருந்து தானாக முன்வந்து விலகி ராணுவப் பயிற்சி மேற்கொண்டார்.

சுமார் 20 நாள்கள் காஷ்மீரில் ராணுவ முகாமில் தங்கி அவர்களுடன் பணியாற்றினார். அவருக்குப் பதிலாக ரிஷப் பந்த் மேற்கிந்தியத் தொடரில் இடம்பிடித்தார்.

பெரிய தாக்கத்தை ஏற்படுத்த முடியவில்லை என்றாலும், ஒரு சதாரண அளவில் விளையாடினார் ரிஷப். இந்நிலையில் மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான தொடரைப் போல தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரிலும் டோனிக்கு ஓய்வு கொடுக்கப்படும் எனத் தெரிகிறது.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி அடுத்த மாதம் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்யவுள்ளது. இதில் மூன்று ரி - 20 போட்டிகளில் இந்திய அணியுடன் விளையாட உள்ளது. இந்தத் தொடருக்கான இந்திய அணி வரும் செப்ரெம்பர் 4 ஆம் திகதி தேர்வு செய்யப்பட உள்ளது. இதில்தான் அவருக்கு ஓய்வு கொடுக்கப்படலாம் எனக் கூறப்பட்டுவருகிறது.

இதுதொடர்பாக பி.ரி.ஐ. செய்தி நிறுவனத்திடம் பேசியுள்ள கிரிக்கெட் சபை அதிகாரி ஒருவர், “2020 உலகக் கிண்ண ரி 20 தொடருக்கு முன்பாக இந்தியா 22 ரி 20 போட்டிகளில் மட்டுமே விளையாட இருக்கிறது. இதனால் உலகக்கிண்ணத்துக்குத்தயாராகும்வகையிலேயே வீரர்களைத்தேர்வுசெய்யதேர்வுக்குழுவினர்விரும்புகின்றனர். அந்தவகையில் உலகக் கிண்ண ரி 20 மற்றும் ஒருநாள்

# ரிஷப் பந்துக்கு அறிவுரை வழங்கிய சேவாக் !

அணியில் தொடர்ந்து இருந்து வருவதால், கிடைக்கும் வாய்ப்புகளையும் பயன்படுத்தி, ரிஷப் பந்த் தமது திறமையை வெளிப்படுத்த வேண்டும் என்று சேவாக் தெரிவித்துள்ளார்.

இந்திய அணியில் 15 ஆண்டுகளுக்கும் மேல் கோலோச்சிய ஜாம்பவான் டோனியின் இடத்தில் தற்போது இருப்பவர் இளம் வீரர் ரிஷப் பந்த். அவர், கடும் நெருக்கடிக்கு ஆளாகி வருகிறார்.

ரிஷப் பந்த் குறித்து முன்னாள் அதிரடி வீரர் சேவாக் சில முக்கிய விஷயங்களை பகிர்ந்திருக்கிறார். ரிஷப் பந்த் மிகச் சிறந்த திறமைசாலி. அபார ஆட்டக்காரர்.

ஆனால் அவர் இன்னும் தம்மை மேம்படுத்த வேண்டியது அவசியம்.இந்திய அணியில் தொடர்ந்து இருந்துவருவதால், அணியுடன் இருக்கும் சூழலையும் அவர் முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும். அடுத்த கட்டமாக, கிடைக்கும் வாய்ப்புகளையும் பயன்படுத்தி, தமது திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று சேவாக் அறிவுறுத்தியுள்ளார்.

# ஓய்வை அறிவித்தார் மெண்டிஸ்



இலங்கை அணியின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் அஜந்த மெண்டிஸ் அனைத்து வகையான கிரிக்கெட் போட்டிகளிலிருந்தும் ஓய்வு பெறவுள்ளார் என அறிவித்துள்ளார்.

உபாதை காரணமாக கிரிக்கெட் விளையாட்டிலிருந்து அவர் நீண்ட காலமாக விலகியிருந்தார்.

அஜந்த மெண்டிஸ், முரளிதரனின் திறமைக்கு மத்தியிலும் தனது தனித்திறமையை சர்வதேச அரங்கில் வெளிப்படுத்தியிருந்தார்.

19 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள மெண்டிஸ் 70 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளதுடன், 87 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 152 விக்கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளார்.

அத்துடன், 39 சர்வதேச இருபதுக்கு இருபது போட்டிகளில் விளையாடியுள்ள மெண்டிஸ், 66 விக்கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளார்.

இறுதியாக கடந்த 2015ஆம் ஆண்டு அவர் சர்வதேசப் போட்டிகளில் விளையாடியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)



## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) செயலர் ஜனாதிபதி சட்டத்தரணி நிஸங்க நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஐ.தே.கவின் ஜனாதிபதி வேட்பாளரை அதன் செயற்குழுவினால் நியமிக்கப்படும் வேட்பாளர் நியமனக் குழுவே தெரிவு செய்யும். வேட்பாளர் நியமனக் குழு ஜனாதிபதி வேட்பாளரைப் பெயரிட்டவுடன், செயற்குழுவிடம் அந்த நியமனத்துக்கு ஒப்புதல் பெறப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த விதிகள் அடங்கிய ஐ.தே.க. யாப்பு மறைந்த ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் காலத்திலேயே தயாரிக்கப்பட்டது என்பதையும் நாணயக்கார சுட்டிக்காட்டினார். (ஐ)

## கோட்டாபயவைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவுடன் பேச்சு நடத்தியுள்ளனர்.

தற்போதைய அரசியல் நிலைமைகள் குறித்து இதன்போது விரிவாகப் பேசப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பிரதிநிதிகளாக – முக்கியமான சில விடயங்களைப் பேசவே இவர்கள் சென்றனர் எனக் கூறப்படுகின்றது.

இதன்போதுபேசப்பட்ட ஏனைய விடயங்கள் தொடர்பான தகவல்கள் எவையும் இதுவரை வெளியாகவில்லை.

மஹிந்த அணியின் ஜனாதிபதி வேட்பாளராக கோட்டாபய அறிவிக்கப்பட்டதிலிருந்து அவருக்கு எதிரான கருத்துக்களை நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர வெளியிட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இலட்சோப...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தொடர்ந்து வள்ளி, தெய்வானை சமேதரராய் சண்முகப் பெருமான் காலை 7 மணிக்கு தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருட்காட்சியளித்தார். பக்தர்களின் அரோகராகோஷம் வானைப்பிளக்க தேரில் வீற்றிருந்தான் முருகன்.

லட்சோப லட்சம் அடியவர்கள் சூழ வள்ளி, தெய்வானை சமேதராய் சண்முகப் பெருமான் தேரில் வீதி உலா வந்து காலை 9.45 மணிக்கு இருப்பிடத்தை வந்தடைந்தார்.

தேர்த்திருவிழாவின் போது நாட்டின் பல பாகங்களில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் லட்சக் கணக்கான அடியவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

அதேவேளை ஆயிரக்கணக்கான அடியவர்கள் அங்க பிரதட்சணம் செய்தும் , நூறுக்கணக்கானவர்கள் காவடிகள் எடுத்தும் கற்பூர சட்டிகள் ஏந்தியும் முருக பெருமானை வழிபட்டனர் .

இன்று காலை 7 மணிக்கு தீர்த்தோற்சவம் நடைபெறவுள்ளது. (ஐ-07)

## எஸ்.பி.திஸ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் அந்தக் கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளர் பஸில் ராஜபக்ஷவிடம் கட்சி உறுப்புரிமையைப் பெற்றுள்ளனர்.

அண்மையில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க கட்சியின் பொருளாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டிருந்தார்.

இதனையடுத்து, அந்தப் பதவிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் லசந்த அழகியவண்ண நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பளையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே கைப்பற்றப்பட்ட வெடிபொருள்கள் குறித்து இவர்களிடம் விசாரணைகள் நடத்தப்பட்டதாகத் தெரியவருகின்றது. (ஐ-07)

## கன்னியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தொல்பொருள் திணைக்களத்தின் ஆதரவோடு சில பௌத்த பிக்குகள் அபகரித்தமைக்கு எதிராக ஆலய நிர்வாகத்தினரால் தொடரப்பட்ட வழக்கில் ஏற்கனவே வழங்கப்பட்ட இடைக் காலத் தடை உத்தரவுகளை விலக்கிக் கொள்ள திருகோணமலை மேல் நீதிமன்றம் நேற்று மறுத்து விட்டது.

எனினும் இவ்விடயத்தை ஒட்டி அரசுத்தரப்பினால் கிளப்பப்பட்டுள்ள ஆட்சேபனைகள் தொடர்பில் பூரண விசாரணைகளின் பின் தனது முடிவை ஒக்ரோபர் 7ஆம் திகதி நீதிமன்றம் அறிவிக்கும் என நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

அந்த இடத்தில் விகாரை கட்டுவதற்கான தடை, பணம் அறவிட்டுப் பற்றுச்சீட்டு விற்பதற்கான தடை, இந்து பக்தர்கள் சமயக் கடமைகள் செய்வதை எவரும் தடுக்க கூடாது என்னும் கட்டளை, ஆலய நிர்வாகம் கோவிலை நிர்வகிக்கின்றமையை யாரும் தடுக்க கூடாது எனும் கட்டளை ஆகிய நான்கு விடயங்கள் அடங்கிய இடைக் கால உத்தரவை நீதிமன்றம் ஏற்கனவே வழங்கியிருந்தது.

இந்நிலையில் நேற்று இந்த வழக்குவிசாரணைக்குவந்தபோது மேற்படி தடை உத்தரவுகளை மீளப்பெறும்படி நீதிமன்றத்திடம் எதிர்மனுதாரர் சார்பில் அரச தரப்பினால் கோரப்பட்டது.

மனு தாக்கல் செய்யப்பட்ட முறைமையில் தவறுள்ளது, மனு குறித்து எதிர்மனுதாரருக்கு உரிய அறிவித்தல் கொடுக்காமலேயே தவறான முறையில் மேற்படி இடைக்கால உத்தரவுகள் பெறப்பட்டுள்ளன, தொல்பொருள் திணைக்களம் மத்திய அரசின் கீழான விவகாரம் என்பதால் மாகாண மேல்நீதிமன்றம் இத்தகைய இடைக்கால் உத்தரவை அத்திணைகளத்துக்கு எதிராக வழங்குவதற்கான நியாயாதிக்கம் கொண்டதல்ல என்பன உட்பட பல ஆட்சேபனகள் அரசதரப்பில் ஆஜரான பிரதிசொலிஸிட்டர் ஜெனரலினால் முன்வைக்கப்பட்டன.

எனினும் மனுதாரர் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் இதற்குக்கடும் ஆட்சேபனையைத் தெரிவித்தமையுடன் இந்தச் சமர்ப்பணங்களை நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளக்கூடாது என்றும் இடைக் கால தடை உத்தரவு தொடர வேண்டும் என்றும் மன்றில் வலியுறுத்தி வாதிட்டார்.

நீண்ட வாதப் பிரதிவாதங்களின் பின் இடைக்கால தடை உத்தரவு நீக்கப்படமாட்டாது என்றும் அது அமுலில் இருக்கும் என்றும் நீதிபதி உத்தரவிட்டார்.

எனினும் நேற்று நீதிமன்றில் தெரிவிக்கப்பட்ட ஆட்சேபனைகள் தொடர்பில் மனுதாரர்கள் எதிர்வரும் 12ஆம் திகதிக்கு முன்னர் பதில் சத்தியக்கடதாசிகளையும், எதிர்மனுதாரர்கள் எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் எழுத்துமூல சமர்ப்பணங்களையும் சமர்ப்பிக்க வேண்டும் என்றும், வழக்கு மீண்டும் ஒக்ரோபர் 7 ஆம் திகதி எடுக்கப்படும்போது ஆட்சேபனைகள் தொடர்பில் நீதிமன்றம் தனது கட்டளையை வழங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மனுதாரர்களாகிய ஆலய நிர்வாகத்தினர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணி துரைராஜசிங்கம், சட்டத்தரணி கேசவன் சயந்தன் ஆகியோர் ஆஜரானார்கள்.

## குற்றச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வருகின்றன எனப் பொலிஸ் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை பொலிஸ் திணைக்களம், குடிவரவு குடியகல்வுத் திணைக்களம், ஆள்களைப் பதிவு செய்யும் திணைக்களம் மற்றும் சிறிலங்கா ரெலிகொம் ஆகியன ஒன்றிணைந்து தரவுத் தொகுதிகளைத் தொடர்புபடுத்தி இந்த பொலிஸ் தொடர்பாடல் கட்டமைப்பை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் மற்றும் சட்டத்தின் பிடியிலிருந்து விலகிச் செல்பவர்கள் பற்றிய தகவல்கள் அந்தக் கட்டமைப்புக்கு உட்படுத்தப்படுவதுடன், எந்தவொரு பொலிஸ் அதிகாரியும் எவ்விடத்திலிருந்தும் அலைபேசியின் ஊடாக அந்தக் கட்டமைப்புடன் தொடர்பு கொண்டு குற்றவாளிகளை அடையாளம் காணமுடியும் என தெரிவிக்கப்படுகின்றது.

இதனூடாகக் குற்றவாளிகளைத் துரிதமாகச் சட்டத்தின் முன்கொண்டுசெல்லவும் போக்குவரத்துக்குற்றங்களைகண்காணிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் மூத்த பொலிஸ் அதிகாரிகளுக்குமிடையே நேற்று முற்பகல் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இவ்வாறு கருத்து தெரிவிக்கப்பட்டது.

இதுதொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொலிஸ் திணைக்களத்தை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்த பின்னர் அதன் மனிதவள மற்றும் பௌதீக வளங்களை அபிவிருத்தி செய்து சிறந்த பண்புத்தரமான பொலிஸ் சேவையை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருவதுடன், அதன் கீழ் இந்த புதிய வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதனிடையே ரயில் கடவைகளில் இடம்பெறும் விபத்துக்களை குறைப்பதற்கு முன்னெடுக்கக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

தற்போது நாட்டில் பாதுகாப்பு வேலிகளைக் கொண்ட ரயில் கடவைகள் 280 காணப்படுவதுடன், 344 கடவைகளில் மணியடித்தல் மற்றும் மின்விளக்கை ஒளிரச் செய்யும் முறை பயன்பாட்டில் உள்ளது. மீதமுள்ள 539 ரயில் கடவைகளிலும் மணியடித்தல் மற்றும் மின்விளக்கை ஒளிரச் செய்யும் முறையை விரைவில் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக இதன்போது தெரிவிக்கப்பட்டது.

மேலும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான உத்தியோகபூர்வ வதிவிடத் தேவைகள், பொலிஸ் நிலையங்களுக்கான வசதிகளைப் பெற்றுக்கொள்ளல், கிளிநொச்சி, மாங்குளம், யாழ்ப்பாணம், பருத்தித்துறை, ஒட்டுச்சுட்டான், முல்லைத்தீவு, மல்லாவி ஆகிய பொலிஸ் நிலையங்கள் மற்றும் யாழ்ப்பாணம் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகம் உள்ளிட்ட புதிய பொலிஸ் நிலையங்களின் நிர்மாணப் பணிகளின் முன்னேற்றம் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

பொலிஸ் நிலையங்களில் சுகாதார வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் உத்தியோகபூர்வ வதிவிடங்களை நிர்மாணிப்பதற்காக 600 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டைச் சமர்ப்பிக்கப்படவுள்ள எதிர்வரும் வரவு –செலவுத் திட்டத்தில் உள்ளடக்குதல் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் நீண்ட காலமாக பதவி உயர்வுகளைப் பெறாத சுமார் 31 ஆயிரம் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வுகளை வழங்குதல் தொடர்பான நடவடிக்கைகள் ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், 03 பிரிவுகளின் கீழ் அவை நடைமுறைப்படுத்தப்படும் எனவும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

அமைச்சர் அர்ஜுன ரணதுங்க, பதில் கடமை பொலிஸ்மா அதிபர் சீ.டீ. விக்ரமரத்ன மற்றும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் இக் கலந்துரையாடலில் பங்குபற்றினர் – என்றுள்ளது. (ஐ)

## ஒற்றையாட்சிதான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய இலங்கைக்கான புதிய ஊடகங்கள் என்ற தலைப்பில நேற்றுமுன்தினம் கொழும்பில் நடந்த கலந்துரையாடல் ஒன்றில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறுதிட்டவட்டமாகத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:–

ஒற்றையாட்சி முறைமைக்குள் சாத்தியமான அதிக அதிகாரப் பகிர்வு. அதுதான் எமது நிலைப்பாடு.

பல நாடுகள் ஒற்றையாட்சி முறையிலான அரசமைப்பைக் கொண்டுள்ளன. அமெரிக்கா போன்ற நாடுகள் விசாலமான சமஷ்டி அரசமைப்பைக் கொண்டுள்ளன.

'ஒற்றையாட்சி ஸ்ரீலங்கா' என்று நான் குறிப்பிடும்போது அது வெறும் காகிதத்தில் அல்லது அரசமைப்புப் புத்தகத்தில் இருக்கும் தகுதியாக அதை நான் குறிப்பிடவில்லை.

ஒருமைப்பட்ட இலங்கை என்பது அது எழுதப்பட்ட காகிதத்தில கூறப்பட்டவாறு பெறுமதி உடையதாக இருக்கவேண்டும்.

அனைத்து மதங்களையும், அனைத்து இனங்களையும், பல்வேறு பொருளாதார, சமூகப் பின்புலங்களையும் சார்ந்தோர் ஒவ்வொருவரும் அந்த ஒற்றையாட்சி முறைமையை இதயபூர்வமாக நம்புகின்ற விதத்தில் அது இருக்க வேண்டும்.

வெறுமனே 'ஒற்றையாட்சி முறைமை' என்ற சொல்லாடல் மட்டும் எனக்குப் போதுமானதல்ல.

ஆகவே, நாங்கள் அது குறித்து மக்களுக்குப் போதிக்கவேண்டும்; புதிய முயற்சிகளை ஆரம்பிக்க வேண்டும்; தேவையான சட்டங்களைக் கொண்டுவரவேண்டும்; கொள்கை முனைப்புகளை முன்னெடுக்கவேண்டும்.

அனைத்து இலங்கையரும் ஒற்றையாட்சியை – ஐக்கியத்தை – மனப்பூர்வமாக உணர்வதற்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அவை அனைத்தையும் நாம் ஆற்றவேண்டும்.

ஆகவே ஒன்றையாட்சி என்பது – ஒருமித்த நாடு என்பது – வெறும் காகிதத்தில் மட்டும் இருப்பதாக அமையக் கூடாது.

அதைச் செய்வதற்கு இனவாதத்தை நாம் முற்றாக இல்லாமலாக்க வேண்டும். பாகுபாட்டுக்கு எதிராக நாம் போராட வேண்டும்; பாரபட்சம் இருகக்கூடாது; கொலைவெறியாட்டம் நடக்கக் கூடாது; இனவெறியாட்டம் இடம்பெறக் கூடாது.

நாங்கள் எல்லோருமே ஒரு நாட்டின் பிரஜைகள்தாம். அதனால் நாட்டின் ஒரு பகுதியிரை 'சிறுபான்மையினர்' என அழைக்க நான் விரும்பவில்லை.

எமது மக்களின் ஒரு குறிப்பிட்ட பகுதியினருக்கு சில ஆதங்கங்கள், குறைகள், துன்பங்கள் இருக்குமாயின் ஒற்றையாட்சிக்குள் அவை கவனிக்கப்பட்டு தீர்க்கப்படவேண்டும். அவர்களுக்குத் தொடராக ஆதங்கங்கள், அதிருப்திகள், குறைகள் இருக்குமாயின் அவை நிச்சயம் தீர்க்கப்பட வேண்டும்.

'ஒற்றையாட்சி இலங்கை' என்பது விட்டுக்கொடுப்புக்கு இடமில்லாதது. அதுவே எமது முடிவு. – என்றார் அவர். (உ)

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நேற்று மீட்டுள்ளனர்.

கடந்த ஒரு வாரமாக வவுனியா தட்சணாங்குளம் கோவில்புதுக்குளம் பகுதியில் உள்ள குளக்கட்டு வேலை நடைபெற்றுக்கொண்டிருந்தது. நேற்று அந்தப்பகுதிக்கு பைக்கோ வாகனத்தைக் கொண்டு சென்றபோது குழி ஒன்று காணப்பட்டுள்ளது. அந்தக் குழியை மூடியபோது அங்கு சந்தேகத்திற்கிடமான பொருட்கள் இருப்பதை அவதானித்த மக்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கினர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த வவுனியா பொலிஸார் அந்தப் பகுதியை சோதனை செய்து பார்த்தபோது டெட்டனேற்றர் குச்சி 2, அதற்கு பயன்படுத்தப்படும் 100 மீற்றர் வயர் ரோல் என்பவற்றை அவதானித்தனர்.

எனினும் அவை மண்ணில் புதையுண்டு கிடப்பதால் அங்கு மேலும் வெடிபொருள்கள் இருக்கலாம் என்று தெரிவித்த பொலிஸார், சம்பவம் தொடர்பாக விசேட அதிரடிப் படையினருக்கும் தகவல் தெரிவித்தனர்.

நீதிமன்றின் அனுமதியுடன் அந்தப் பகுதியை ஆழமாக்கிச் சோதனைமேற்கொள்ளவுள்ளதாக பொலிஸார் மேலும் கூறினர். (ஐ)

## மருத்துவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) துவர் சிவரூபன் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார் என்ற செய்தியைப் பொலிஸ் ஊடகப் பிரிவு மறுத்துள்ளது.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவைப் படுகொலை செய்வதற்கு பாதாள உலகக் குழுவினருடன் பேரம் பேசப்பட்டுள்ளதாகவும், இதனால் அவரது பாதுகாப்பை அதிகரிக்குமாறு பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் கோரியுள்ளனர் என்றும் கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

தீவிரவாதச் செயற்பாடுகளுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட பளை மருத்துவமனையின் பொறுப்பதிகாரியான மருத்துவர் சின்னையா சிவரூபனிடம் விசாரணை நடத்தி வரும் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரே கோட்டாபயவின் பாதுகாப்பை அதிகரிக்குமாறு கோரியுள்ளனர் என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் செய்தியையே பொலிஸ் ஊடகப் பிரிவு மறுத்துள்ளது. அவ்வாறு மருத்துவர் சின்னையா சிவரூபன் தகவல் வழங்கவில்லை என்று பொலிஸ் ஊடகப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

பளை வைத்தியசாலை அத்தியட்சகரும் முன்னாள் சட்ட மருத்துவ அதிகாரியுமான சின்னையா சிவரூபன் (வயது-41) கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் வைத்து இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு பயங்கரவாத விசாரணைப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

அவர் தற்போது யாழ்ப்பாணத்தில் தடுத்துவைக்கப்பட்டு பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் விசாரிக்கப்பட்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

காலைக்கதிர் Kalaikathir



# நல்லைக் கந்தன் நேற்றுத் தேரேறி அருட்காட்சி







## நல்லூர் ஆலய சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஓக.30

இலங்கை இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவத்தையொட்டி நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் நடத்தும் தெய்வீக இசையரங்கில் –

இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.45 மணி முதல் 7.15 வரை **இசைக்கச்சேரி** –

பாட்டு – அமுதா ரகுநந்தன், அபிராமி ரகுநந்தன், வயலின் – சு.கோபிதாஸ், மிருதங்கம் – ர.ராஜ் நாராயணன், கெஞ்சிரா – ம.சிதம்பரநாதன், கடம் – ரா.ரகுநந்தன்.

7.15 – 8.15 வரை **இசைக்கச்சேரி** –

பாட்டு – பராசக்தி விநாயக தேவராசா, வயலின் – கா. குகபரன், மிருதங்கம் – ம.சிதம்பரநாதன், முகர்சிங் – ந.சதீஸ்குமார். (இ)







நல்லூர்க் கந்தனுக்கு அரோகரா...!
முருகப் பெருமானுக்கு அரோகரா...!!



இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.08.2019 இல் வெளியிடப்பெற்றது.

# நேற்றைய நல்லைக் கந்தன் இரதோற்சவம்...

படப்பிடிப்பு: செல்வராசா



















லண்டன் ஹரோ நகரின் முன்னாள் மேயரும் இலங்கை வம்சாவழித் தமிழரு மான கிருஷ்ணா சுரேஷ் மற்றும் அந்த நகரத்தின் முன்னாள் கவுன்ஸிலரான அவரது துணைவியார் ஆகியோர் நேற்று நல்லூர்க் கந்தன் ரதத்தில் பவனி வந்த போது ஆலய வீதியில் அமைந்துள்ள யாழ். மாநகரசபையின் உற்சவ கால பணிமனையில் யாழ். மேயர் ஆனோல்ட், உதவி மேயர் ஈசன், ஆணையாளர் த.ஜெயசீலன் ஆகியோர் சகிதம் முருகப் பெருமானை தரிசித்த போது எடுக்கப்பட்ட படம். (படம் - செல்வராசா)



கல்விச் சேவையுடன் ஒன்றிய நிறுவனம்

இன்றைய தீர்த்த உற்சவ நிகழ்வில்
நல்லைக் கந்தன் அருட்கடாட்சம் எல்லோருக்கும்
கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்!

யாழ்ப்பாணம்

சுன்னாகம் 021 224 2022
பருத்தித்துறை 021 492 3201
கச்சேரி 021 222 6699
ஆவரங்கால் 021 222 6688
தெல்லிப்பளை 021 224 3737
சாவகச்சேரி 021 227 0700
நெல்லியடி 021 300 6550
கிளிநொச்சி 021 228 5505
விசுவமடு 021 320 1515
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
வவுனியா 024 222 7777
மன்னார் 023 225 1656

★ குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
★ மும்மொழிகளிலும் வாகனப் பயிற்சி.
★ இரவு நேர வாகனப் பயிற்சி.
★ எழுத்துப் பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
★ தவணை முறைக் கட்டணங்கள்.
★ அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
★ சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.

கிருபா லேணர்ஸ்

கிருபா லேணர்ஸ் KIRUBAA LEARNERS

தொலைபேசி இல.
021 222 4353
021 492 3200
071 454 6960

DS.589 அரச அங்கீகாரம் பெற்ற கனரக (A) தர சாரதிப் பயிற்சிப் பாடசாலை



தலைமைக் காரியாலயம்
226, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி

வட மாகாணத்தின் முதல்தர சாரதி பயிற்சிப் பாடசாலை